செப்டம்பர்
1992
SEPTEMBER

# தமிழர் தகவல்


# TAMILS' INFORMATION

இதழ்
20
ISSUE










## ஸ்பொன்ஸர் கட்டணம் இப்போது 450 டாலர்கள்

## SPONSORSHIP FEE 450 DOLLARS

குடும்ப உறவினர்களை ஸ்பொன்ஸர் செய்வதற்கான கட்டணம் *1992* செப்டம்பர் முதலாம் திகதியிலிருந்து நானூற்று ஐம்பது டாலர்களாக அதிகரித்துள்ளது. இதற்கு முன்னர் இந்தக் கட்டணம் *350* டாலர்களாக இருந்தது. *19* வயதுக்குட்பட்ட பிள்ளைகளின் கட்டணத்தில் எந்த மாற்றமுமில்லை. வேலை அனுமதிப்பத்திரம் (Work Permit) பெறுவதற்கான கட்டணமும் இதே தினத்திலிருந்து தனி ஒருவருக்கு *100* டாலர்களாகவும், குடும்பம் ஒன்றுக்கு *200* டாலர்களாகவும் அதிகரித்துள்ளது.









இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி

A Monthly Information Digest

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

**Established:**
February 1991

P.O. Box - 3
Station 'F'
Toronto, Ontario.
M4Y 2L4

Phone:
(416) 920-9250
Fax:
(416) 757-7399

**Produced by:**
Eelam Thamil
Information Centre
(ETHIC) of Toronto
&
Catholic Immigration
Bureau,
Scarborough Region

**Published by:**
Thamil Information &
Research Unit (THIRU)
&
Ahilan Associates

**Editor:**
Thiru S. Thiruchelvam

**Asst. Editor:**
Ranji Thiru

**Circulation Manager**
S. T. Singam

**Production Asst:**
Kumar N. Dasan

**Design:**
Ahilan Associates

**Layout & Printers:**
Reflex Printing
(416) 975-0196

**PUBLISHED MONTHLY**

**4000 Copies**

## ஆசிரியரிடமிருந்து................................FROM THE EDITOR

தமிழர்கள் உலகில் எங்கெல்லாம் சென்று குடியேறியிருக்கிறார்களோ, அங்கெல்லாம் தமிழ் மொழியும் அதன் கலை கலாசாரமும் பொங்கிப் பிரவாகித்து, பூத்துக் குலுங்கி மணம் பரப்புகின்றது. இதற்கு கனடா மட்டும் விதிவிலக்கல்ல.

ஒவ்வொரு வார இறுதி நாட்களிலும் எத்தனை விழாக்கள். விசேஷமாக வசந்த கால, கோடை கால வார இறுதி நாட்கள் என்றால் சொல்லவே தேவையில்லை. நடன விழாக்கள், அரங்கேற்றங்கள், நாடகப் போட்டிகள், தமிழ் விழாக்கள், கலை விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள் என்று அடுக்கிக்கொண்டே போகலாம்.

இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல இவ்வருட ஆகஸ்ட் மாதம் அமைந்துவிட்டது. றிச்மன்ட் ஹில் இந்து ஆலயத்தில் முருகனுக்கும், வெங்கடாசலபதிக்கும் கும்பாபிஷேகப் பெருவிழா. போட்டா போட்டிகளுடன் கலை விழாக்கள், இவற்றுக்கிடையில் தற்போது வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் சேர்ந்து விட்டன. ராகப்பிரவாகம் வானொலி நிகழ்ச்சியை வழங்கும் கோணேஷ் அவர்கள் புதிய பல்வேறு நவீன வசதிகளுடன் கலையகமொன்றைத் திறந்துள்ளார். சங்கமம் வானொலி நிகழ்ச்சியின் முதலாண்டு பூர்த்தியையொட்டி இளையபாரதி இரண்டு நாள் மேடை நிகழ்ச்சிகளை நடத்தினார். தேமதுரம் வானொலி நிகழ்ச்சியின் முதலாண்டு பூர்த்தி, பாராட்டு விழாவுடனும் ஈழத் திரைப் படமான "பொன்மணி" படக் காட்சியுடனும் நடந்தேறியது.

ஆகஸ்ட் மாதத்தில் முக்கியமாகக் குறிப்பிடவேண்டியவை மூன்று. முதலாவது, தமிழர் வர்த்தகக் கண்காட்சி ஸ்கார்புரோ ஏஜின்கோர்ட் கல்லூரி அரங்கில் ஆகஸ்ட் 23ம் திகதி நடைபெற்றது. குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தமிழர்களின் பல்வேறு தயாரிப்பு, உற்பத்தி, கைவண்ணம், தொழில் நுட்பம், வர்த்தகம் சம்பந்தமானவைகளை இங்கு காணக்கூடியதாகவிருந்தது. இது ஒரு கன்னி முயற்சி என்னும் வகையில் பாராட்டப்பட வேண்டியது. அடுத்தடுத்த ஆண்டுகளில் மேலும் சிறப்பாகவும் விரிவாகவும் இதனை ஏற்பாடு செய்யலாம்.

இரண்டாவது, ஏசியன் கிரிக்கெட் கழகம் (A.C.C.) நடத்திய விருது வழங்கும் நிகழ்ச்சி. ஆகஸ்ட் 24ம் திகதி ஏஜின்கோட் கல்லூரி அரங்கில் நடைபெற்றது. தமிழர்கள் மத்தியில் சரியானவர்களை இனங் கண்டு, சேவையை மனதில் கொண்டு விருது வழங்கும் நடைமுறையை "தமிழர் தகவல்" சஞ்சிகை கடந்த பெப்ரவரியில் இங்கு அறிமுகம் செய்து வைத்தது. இந்த வகையில் A.C.C. நிகழ்ச்சி இரண்டாவதாகும். ஏற்கனவே சமூக சேவைக்கும், இலக்கிய சேவைக்கும் தமிழர் தகவல் விருதுகளை முறையே பெற்ற திருவாளர்கள் நா. சிவலிங்கமும், க. தா. செல்வராஜ கோபாலும் (ஈழத்துப் பூராடனார்) மீண்டும் அதே சேவைகளுக்காக இங்கு விருது பெற்றது குறிப்பிடத்தக்கது.

இசைக் கலைஞர் கோணேஷ் இருபத்தைந்து ஆண்டு கால சேவைக்காக கௌரவிக்கப்படவேண்டும் என "தமிழர் தகவல்" கடந்த இதழில் வலியுறுத்தியிருந்தது. அவருக்கு இங்கு விருது வழங்கப்பட்டது மகிழ்ச்சியானது.

ஏற்கனவே ஒன்ராறியோ மாகாண அரசிடமிருந்து இவ்வருட வர்த்தக விருது பெற்ற ஸ்ரீ சிவா நகை மாளிகையினருக்கு சிறந்த வர்த்தக நிறுவனத்துக்கான விருது கிடைத்தது. அதன் உரிமையாளர்களில் ஒருவரான திரு. சிவா. சின்னத்தம்பி விருதினை பெற்றுக்கொண்டார்.

இந்த மேடையில் பலருக்குப் பலராலும் விருதுகள் வழங்கப்பட்டன.

ஈழத்து வானொலியின் சிரேஷ்ட அறிவிப்பாளரான பி.எச். அப்துல் ஹமீதுக்கு ரொறன்ரோவில் வெள்ளி விழாப் பாராட்டு வழங்கப்பட்டது மூன்றாவது. இது கடந்த 29ம் திகதி பாதர்ஸ்ற் சென்றல் தொழில் நுட்ப அரங்கில் நடைபெற்றது. இவையெல்லாம் பாராட்டுக்குரிய செயற்பாடுகள்.

திரை கடலோடியும் திரவியம் தேடிய தமிழன், இப்போது ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் திக்கெட்டும் புகழ் பரப்பும் தூய திருப்பணியில் ஈடுபட்டுள்ளான். நன்று! நன்று!

கனடா தேசிய தமிழர் மனறம் (NACT) ஏற்கனவே அறிவித்தவாறு,இவ்வருடம் பல்கலைக்கழகத்துக்கு தெரிவான தமிழ் மாணவரில் சிறந்த மாணவருக்கு ஆயிரம் டாலர்கள் பரிசு வழங்கும் நிகழ்ச்சியை இந்த மாதத்தில் நடந்த ஏற்பாடு செய்துள்ளது.

தமிழர் தகவல் தனது வருடாந்த விருது வழங்கும் நிகழ்ச்சியை இரண்டாவது ஆண்டு பூர்த்தி இதழ் (பெப்ரவரி இதழ்) வெளியீட்டு விழாவின் போது நடத்தவுள்ளது. கடந்த வருடம் அறிவித்தவாறு, இவ்வருடம் முதல் தொண்டர் சேவை விருதுகளும் (Volunteer Service Awards) வழங்கப்படவுள்ளன. தமிழ் இளைஞர், யுவதிகள், குறிப்பாக தமிழ் மாணவர்கள் மத்தியில் சமூக சேவை உணர்வினை அதிகரிக்கச் செய்வதற்காகவே தொண்டர் சேவை விருதுகளை எம்மவர் மத்தியில் அறிமுகஞ் செய்கின்றோம். இவை பற்றிய விபரங்கள் அடுத்த தமிழர் தகவல் இதழில் வெளிவரும்.

எஸ்.திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ஸ்தாபிதம்:
பெப்ரவரி 1991

முகவரி:
P.O. Box - 3
Station 'F'
Toronto, Ont.
M4Y 2L4

தொலைபேசி:
(416) 920-9250
ஃபாக்ஸ்:
(416) 757-7399

தயாரிப்பு:
ஈழத்தமிழர் தகவல் நிலையம்
ரொறன்ரோ
&
கத்தோலிக்க
குடிவரவு நிலையம்,
ஸ்காபுரோ

வெளியீடு:
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு
&
அகிலன் அசோஷியேட்ஸ்

ஆசிரியர்:
எஸ். (திரு) திருச்செல்வம்

உதவி ஆசிரியர்:
றஞ்சி திரு

விநியோக முகாமையாளர்:
எஸ். ரி. சிங்கம்

தயாரிப்பு உதவி:
குமார் என். தாஸன்

வடிவமைப்பு:
அகிலன் அசோஷியேட்ஸ்

அச்சுப்பதிப்பு:
றிப்ளக்ஸ் பிரிண்டிங்
(416) 975-0196

மாதாந்த
வெளியீடு

4000 பிரதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய குடிவரவுச் சட்டத்தைக் கண்டித்து ரொறன்ரோவில் ஆர்ப்பாட்டம்: கூட்டங்கள்

# Immigration Bill Denies Basic Rights

கனடாவின் குடிவரவுச் சட்டத்தில் பல மாற்றங்களைக் (பாதகமான) கொண்டுவரும் மசோதா (Bill 86)வுக்கு நாலா பக்கத்திலிருந்தும் பலமான எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. தொழிற் சங்கங்கள், வழக்கறிஞர்கள், தேவாலய சபைகள், சமூகவியலாளர்கள், அகதிகள் சேவை நிறுவனங்கள், மனித உரிமை அமைப்புகள், குடிமக்கள் சேவை மன்றங்கள் என்று பல் துறைகளிருந்தும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.



"எனது கோழிக்கு நான்கு கால்கள்" என்பதுபோல அமைச்சர் வால்கூட் தனது மசோதா சிறப்புத் திறமை வாய்ந்தது என்று கூறிக் கொண்டு பிடிவாதமாக நிற்கிருர்.


ஒன்ராறியோவிலுள்ள நாற்பதுக்கும் அதிகமான பொது அமைப்புகள் இணைந்து மசோதாவின் பாதக விளைவுகளை மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்கென கூட்டமைப்பு ஒன்றினை "The Coalaition For A Just Refugee and Immigration Policy" என்ற பெயரில் அமைத்துள்ளன.

இந்த அமைப்பு கடந்த மாதம் பத்தாம் திகதி ரொறன்ரோவில் வெகுஜனத் தொடர்புச் சாதனங்களின் மகாநாடொன்றினை நடத்தியது. இங்குள்ள சகல பத்திரிகைகள் வானொலிகள், தொலைக்காட்சி நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டனர். அகதிகள் வழக்கு விசாரணைகளில் புகழ்பெற்ற பாரிஸ்ட்டர் திரு. லோர்ண் வால்மன் (Lorne Waldman), கனடா தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஜனுப் ஹஸன் யூசுப், ரொறன்ரோ அகதிகள் விவகார சபையைச் சேர்ந்த நான்ஸி பொக்கொக் அம்மையார் உட்பட பதினொரு அமைப்புகளின் பிரதிநிதிகள் இதில் உரையாற்றியதுடன் கேள்விகளுக்கும் பதிலளித்தனர்.

அகதிகளாகப் புதிதாக வருபவர்களை உடனடியாக எல்லைப் புறத்தில் வைத்தே விசாரித்து தீர்ப்பு வழங்கும் அதிகாரம் குடிவரவு இலாகா அதிகாரிகளுக்கு வழங்கப்படுவதை இங்கு சகலரும் கண்டித்தனர். அகதியாக வரும் ஒருவருக்கு சட்ட ஆலோசனை வழங்கக்கூட ஒருவரை அனுமதிக்காது, அவர்களைத் திருப்பி அனுப்பச் சட்ட ரீதியாக வசதி செய்து கொடுப்பது மனித உரிமைகளை மீறும் நடவடிக்கை என்று பாரிஸ்டர் லோர்ன் வால்மன் சுட்டிக் காட்டினுர்.

மேற்படி கூட்டமைப்பின் இரண்டாவது எதிர்ப்பு நிகழ்ச்சி கடந்த மாதம் 20ம் திகதி ரொறன்ரோ Adelaide வீதியிலுள்ள பிரதமர் மல்ருேனியின் கன்ஸர்வேடிங் கட்சி அலுவலகத்துக்கு முன்னுல் நடைபெற்றது. "Kill Bill C-86" என்ற சுலோக அட்டைகளுடனும், பதாதைகளுடனும் நூற்றுக் கணக்கானவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கு பற்றினர். இரண்டு மணி நேர ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் நடைபெற்ற கூட்டத்தில் ஸ்படைனு தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. டான் ஹீப் உரையாற்றினுர். இரண்டாவது கண்டன ஆர்ப்பாட்டம் ஆகஸ்ட் மாதம் 29ம் திகதி ரொறன்ரோ குயீன்ஸ் பார்க்கில் நடைபெற்றது.

பத்திரிகையாளர் சந்திப்பில் லோர்ண் வால்மன், நான்ஸி பொக்கொக், ஹஸன் யூசூப் ஆகியோர் உரையாற்றுவதை நடுப்படத்தில் காணலாம். கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஒரு பகுதியையும், திரு. டான் ஹீப் எம்.பி. உரையாற்றுவதையும் மற்றைய படங்களில் காணலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிதாக அமலுக்கு வரும் 'குழந்தைப் பணத்திட்டம்'; ஒளிமயமான எதிர்காலம் தெரிகின்றது

## CHILD TAX CREDIT - BRIGHTER FUTURES

**1992** ஆண்டு மாசி மாதம் மத்திய அரசாங்க வரவு செலவுத் திட்ட அறிக்கை தற்போதைய குழந்தைப் பரிசுத் திட்டத்தை மாற்றியமைக்கப்போவதாக அறிவித்தது உங்களுக்குத் தெரிந்தது. சென்ற மாதம் இந்த மாற்றங்கள் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டன.

இந்த மாற்றங்களின் முக்கிய குறிக்கோள் இரண்டு என அராசங்கம் கூறியது. முதலாவது தற்போதைய நிலையில் குழந்தைகள் சம்பந்தமான பலவித வரிச் சட்டங்களை தவிர்த்து இலகுவான ஒருமித்த சட்டம் ஒன்றை உருவாக்குதல். இரண்டாவது தற்போதைய "யாவருக்கும் சம உரிமை" என்ற அடிப்படையில் குழந்தைப் பணம் கொடுப்பதை மாற்றி செல்வந்த குடும்பங்களின் பிள்ளைகளுக்கு பணக் கொடுப்பனவை நிறுத்தி வசதி குறைந்த குடும்பக் குழந்தைகளுக்கு கூடிய பண உதவி அளிப்பது. இந்த மாற்றங்களை சற்று விரிவாக ஆராய்வோம்.

**தற்போதைய திட்டம்:** வசிப்புரிமை (Landed Immigrant) பெற்ற குடும்பங்கள் 18 வயதுக்குட்பட்ட ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு மாதத் தொகை $35.00. அதாவது வருடம் $420.00. கோடீஸ்வரருடைய குழந்தைக்கும், சாதாரண செக்குரிட்டி சேவகர் குழந்தைக்கும் ஒரே பணம். இன்று 37 கோடி குடும்பங்களுக்கு இந்தப்பணம் கிடைக்கின்றது.

**புதிய திட்டம்:** உங்கள் குடும்ப வருமானம் அதாவது கணவன் மனைவி இருவரினது சேர்ந்த வருமானம் $26,000க்கு உட்பட்டதாக இருந்தால் 18 வயதுக்குட்பட்ட குழந்தை ஒவ்வொருவருக்கும் மாதம் $85, அதாவது வருடம் $1020. இதனுடன் சில விசேட நிலைகளில் மேலதிக பணம் வழங்கப்படும். விசேட நிலைமைகள் பின்வருமாறு: ஒன்று 7 வயதுக்குட்பட்ட குழந்தைகளுடைய பெற்றோர் குழந்தை பராமரிப்பு (Child Care Expenses) செலவுகள் வருமான வரியில் கோராவிட்டால் அந்தக் குழந்தைக்கு வருடத்திற்கு $213.00 மேலதிகப் பணம்.

**இரண்டாவது:** ஒரு குடும்பத்தின் மூன்றும் நாலாம் குழந்தைகளுக்கு வருடத்தில் $75 மேலதிக பணம்.

**மூன்றாவது:** குடும்பத்தில் கணவன் அல்லது மனைவி ஒருவராவது வேலைசெய்தால் அந்தக் குடும்பத்துக்கு வருடத்தில் $500 மேலதிக பணம் வழங்கப்படும். சமூக நலன் பெறும் தனி பெற்றோராக இருந்தால் இந்த மேலதிக $500 கிடைக்க மாட்டாது.

குடும்ப வருமானம் $26,000 க்கு கூடும்போது உங்கள் குழந்தைப் பணம் குறையத் தொடங்கும். குடும்பவருமானம் சுமார் $50,000 ஆகும்போது தற்போதைய திட்டதிலும் புதிய திட்டத்திலும் ஒரேயளவு பணம் கிடைக்கும். குடும்ப வருமானம் $65,000 மேலாகும்போது குழந்தைப் பண உரிமை பறிபோகும். இந்த நிலைமை பின்வருமாறு அமையும்.

**வருமானவரி:** தற்போதைய திட்டத்தில் குழந்தைப் பணத்தை கூடிய வருமானம் உடைய குடும்பத்தலைவர்/தலைவி தருகர் வருமானமாக சேர்க்க வேண்டும். பின்னர் குழந்தைகளுக்கென வருமானவரி கழிவு பெறும் உரிமையும் உண்டு. புதிய திட்டத்தில் குழந்தைப் பணம் வருமான வரியில் சேர்க்கத்தேவையே.

**ஆரம்பம்:** இந்த புதிய திட்டம் 1993 ஜனவரி மாதம் தொடக்கம் அமலாக்கப்படும். உங்கள் 1991ம் ஆண்டு வருமான வரிப் பத்திரத்தைக் கொண்டு குழந்தையின் பண உரிமைத் தொகை நிர்ணயிக்கப்படும். 1993ம் ஆண்டு ஜூலை மாதம் தொடக்கம் உங்கள் புதிய 1992ம் ஆண்டு வருமான வரிப் பத்திரத்தை கொண்டு உரிமையை நிர்ணயிப்பர்.

**குழந்தைப் பரிசு:** (Child Tax Credit) - இந்தப் புதிய திட்டத்தில் குழந்தைகளுக்கு கொடுக்கும் அடிப்படை உயர்வு வருடத்தில் 420லிருந்து $1020 உயர்கின்றது. இந்த $600 கூடியதான தொகை அரசாங்கம் மேலதிகமாக கொடுக்கவில்லை. தற்போது $28,000 வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு வருடமொருமுறை வருமானவரி குழந்தைப் பரிசாக கொடுக்கும் $600 ஐ Child Tax Credit ஆக மாற்றி மாதாமாதம் கொடுக்கின் றனர். 1992ம் ஆண்டு வருமான வரி வரு டமே குழந்தைப் பரிசு பெறும் கடைசி வருடமாகும்.


யோகி தம்பிராஜா
F.C.A./F.C.M.A. (U.K)
நிதிநிபுணர்


### புதிய குழந்தைப் பணம்

| கணவன் மனைவி சேர்ந்த வருமானம் | 2 குழந்தைகள் மாதப் பணம் | |
|---|---|---|
| வருடம் | தற்போது | புதியது |
| 20,000 | 70.00 | 211.00 |
| 30,000 | 70.00 | 153.00 |
| 40,000 | 70.00 | 112.00 |
| 50,000 | 70.00 | 70.00 |
| 60,000 | 70.00 | 28.00 |
| 65,000 | 70 | — |

**ஒளிமயமான எதிர்காலம்:** புதிய குழந்தைப் பண திட்டத்தில் பெறும் மேலதிக பணத்தை முதலிடுவதால் உங்கள் குழந்தையின் எதிர்காலத்தை ஒளிமயமாக்கும் வாய்ப்பில்லை. இந்தப் பொறுப்பை அரசாங்கம் பெற்றோராகிய உங்கள் கையில் தந்திருக்கின்றது. இதனை செவ்வனே செய்ய முதலில் நீங்கள் தவிர்க்க வேண்டியது:

**குழந்தையின் பெயரில் காப்புறுதி வாங்குதல்:** மரணத்தால் ஏற்படும் உழைப்பின் இழப்பை நிவர்த்தி செய்வதே காப்புறுதி. இதனால் உங்கள் குழந்தையின் உயிரில் காப்புறுதி தேவையே இல்லை என்பது தெளிவாகின்றது.

**குழந்தைகளுக்கு சன்மான திட்டம் பெறுதல்:** இது கவர்ச்சிகரமாகத் தோன்றலாம். இதனை தீர ஆராயும்போது இதனில் பல குறைகள் உள்ளன. முக்கியமாக இதனில் உள்ளபல நிபந்தனைகளினால் இதில் பங்குபெறும் 100 குழந்தைகளில் சுமார் 40 குழந்தைகளுக்கு இந்த சன்மானம் கிடைப்பதில்லை. இதனால் நீங்கள் குழந்தைக்காக முதலிடும் பணத்தின் வளர்ச்சி முழுவதுமே பறிபோகும். மேலும் சன்மானம் பெறும் குழந்தைகள் இந்தச் சன்மானப் பணத்திற்கு வருமான வரி கட்டவேண்டிய நிலைமை ஏற்படலாம்.

**நீங்கள் செய்ய வேண்டியது:**

வங்கியில் சேமித்தல்: இந்தப் பணத்தை நீங்கள் குழந்தையின் பெயரில் வங்கியில் சேமிக்கலாம். இதன் வளர்ச்சியில் உங்களுக்கோ குழந்தைக்கோ வருமான வரி கட்ட வேண்டியதில்லை. நீங்கள் விரும்பிய காலம் விரும்பிய விதத்தில் பணத்தை மீளப்பெறலாம். இதனில் குறை என்னவென்றால் வங்கிகள் இப்படி சிறு சேமிப்புக்கு மிகவும் சொற்ப வட்டியே கொடுக்கிறார்கள். இதனால் பணத்தின் வளர்ச்சி மந்தமடைகின்றது.

முதலீட்டு நிதிகள்: வங்கிகள் போல் முதலீட்டு நிதிகளும் கனடாவில் தனியார் துறையில் அரசாங்கத்தின் கண்காணிப்பில் இயங்குகின்றன. இவற்றில் உங்கள் குழந்தையின் பணத்தை நேரடியாக அரசாங்க திறைசேரி காசோலை (Government of Canada Treasury Bills), அரசாங்க கடன் பத்திரங்கள் (Govern-met of Canada Bonds) முதலியவற்றை நீங்கள் தேர்ந்தெடுத்து முதலிடும் வாய்ப்பு உண்டு. இந்த முதலீட்டில் உங்கள் முதலோ வளர்ச்சியோ பறிபோகாது. உங்கள் குழந்தைகள் வளர்ந்து அவர்கள் விரும்பிய தேவைக்கு இதனை உபயோகிக்கலாம். உதாரணமாக ஒரு வீடு வாங்க அடிப்படைப் பணமாகவோ அல்லது சொந்த வியாபாரம் ஆரம்பிக்கவோ இதனைப் பயன்படுத்தலாம்.

வங்கிகளில் முதலிடும் பணம் போல் இவற்றை விரும்பிய நேரம் விரும்பிய விதத்தில் பெறும் வசதிகள் உண்டு. இவற்றை மீளப் பெறும்போது நீங்களோ உங்கள் குழந்தையோ இந்த வளர்ச்சிக்கு வரிகட்ட வேண்டியதில்லை.

அரசாங்கத்தின் இந்தப் புதிய கூடிய குழந்தைப் பணத்தை செவ்வனே உபயோகிப்பதால் எங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தை ஒளிமயமாக்குவது எங்கள் கையில்தான் தங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10,000 வீரர் பங்குபற்றிய பாஸிலோனு ஒலிம்பிக்; கனடாவுக்கு மொத்தம் 18 பதக்கங்கள் கிடைத்தன

# 1992 OLYMPIC - 18 MEDALS FOR CANADA

**1996**ம் ஆண்டு அமெரிக்காவின் ஜோர்ஜியா மாநிலத்தில் உள்ள அற்லாந்தா நகரில் அடுத்த ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் என்ற உத்தியோகபூர்வ அறிவிப்புடன், ஸ்பெயின் நாட்டின் பாஸிலோனு நகரில் நடைபெற்ற 25வது ஒலிம்பிக் பந்தயங்கள் கோலகமாகப் பூர்த்தியாகின.

சம்பிரதாயப்படி பாஸிலோனு நகர மேயரிடமிருந்து ஒலிம்பிக் கொடியை அற்லாந்தா நகர பிதா பொறுப்பேற்றுக் கொண்டார்.

ஒலிம்பிக் பந்தயங்கள், சாதனைகளின் ஒரு சகாப்தம்; சகாப்தத்தின் ஒரு சாதனை!

விருதை தமதாக்கிய விளையாட்டு வீரர்களைத் தாராளமாகவும், விருந்தைத் தமதாக்கிய பார்வையாளர்களை ஏராளமாகவும் கொண்டிருந்த இருபத்தைந்தாவது ஒலிம்பிக் பந்தயங்கள் ஜூலை 25முதல் ஆகஸ்ட் 9 வரை ஆடம்பரமாக, ஆரவாரமாக நடைபெற்று முடிவடைந்தன.

மனித சக்திக்கு மீறிய செயல் என்ற கருத்து தகர்த்தெறியப்படுவதுதான் ஒலிம்பிக் பாரம்பரியம் என்பது இம்முறையும் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. சாகசச் செயல்களினாலும் சாதனைப் புயல்களினாலும் மகிழ்ச்சி பொங்கிப் பிரவாகித்துள்ளது. புதிய சாதனை உருவாக்கப்பட வேண்டும் என்ற உத்வேகம் அபரிதமாக வீரர்களிடம் காணப்பட்டதால் மைதானத்தை அவர்கள் நடந்து கடக்கவில்லை; பறந்து கடந்தனர் என அவதானிகள் தெரிவித்தனர்.

இம்முறை நடைபெற்ற பந்தயங்களில் 172 நாடுகள் பங்குபற்றியதன் மூலம் ஆகக் கூடிய நாடுகள் கலந்து கொண்ட பெருமை மிக்க சாதனை இந்த ஒலிம்பிக் பந்தயத்திற்கு கிடைத்தது. பத்தாயிரம் வீரர்கள் பங்குபற்றினர். 257 பலதரப்பட்ட பந்தயங்கள் இடம்பெற்றன. 809 பேர் விருதுகளை பெற்றனர். 3,500 மில்லியன் மக்கள் பார்த்து மகிழ்ந்தனர்.

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின்னர் முதற் தடவையாக ஜேர்மனி நாடு ஒரே தேசமாக இம்முறை போட்டியிட்டது. யூகோஸ்லாவியா வீரர்கள் இரண்டாகப் பிளவுபட்டு குரோஸியா, ஸ்லோவினியா ஆகிய இரு தேசங்களாகியதும் இம்முறைதான்.

1988ம் ஆண்டு சியோலில் நடைபெற்ற ஒலிம்பிக் பந்தயத்தில், சுத்தியலும் அரிவாளும் நட்சத்திரமும் அடங்கிய செங்கொடியின் கீழ் பங்குபற்றிய சோவியத் யூனியன், இம்முறை Sovier Dis Union ஆகியதால், சுதந்திரமடைந்த 15 தனித்தனி நாடுகளாகி, சுதந்திர நாடுகளின் கூட்டமைப்பு (Unified Team) என்கின்ற பெயரில் கலந்து கொண்டு 45 தங்கம், 38 வெள்ளி, 29 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று முதலிடம் வகித்தது. 1988ல் சியோலில் நடந்த போட்டியிலும் சோவியத் யூனியன் 55 தங்கம் உட்பட 132 மெடல்களைப் பெற்று முதலிடத்தை அலங்கரித்தது.

இம்முறை அமெரிக்கா இரண்டாமிடத்தையும், ஜேர்மனி, சீனு ஆகியவை முறையே மூன்ருவது, நான்காவது இடங்களையும் தத்தமதாக்கிச் சிறப்படைந்தன.

ஒலிம்பிக் இலச்சினையை இம்முறை பலர் வரைந்திருந்தாலும் சிறப்பானதாகவும் பொருத்தமானதாகவும் தேர்வு பெற்றது ஜோஸப் மரியா ட்ரையாஸ் என்பவரின் ஓவியம்தான். ஓடிக்கொண்டிருக்கும் ஒரு விளையாட்டு வீரரின் உருவம் அதில் பொறிக்கப்பட்டுள்ளது. நீல நீரும், மஞ்சள் சூரியனும், கொண்ட மத்திய தரைக் கடலின் வர்ணமும், ஜீவ சக்தியைக் குறிக்கும் சிவப்பையும் அவர் தீட்டியுள்ளார்.

ஒலிம்பிக் பந்தயத்தின் ஆரம்ப தினத்தில் ஒரு வீரர் தீவட்டி ஏந்தி ஓடி வந்து ஒலிம்பிக் தீபத்தை ஏற்றுவதுதான் சம்பிரதாயம். ஆனுல் இம்முறை ஒரு வில் வித்தை வீரர், அக்னி அம்பை தூரத்தில் இருந்து குறி தவருமல் தீபத்தின் மீது எய்து தீபத்தை ஏற்றி வைத்தார்.

**இளவாலை எஸ். ஜெகதீசன்**

கிரேக்க நாட்டில் கி.மு. 776ல் ஒலிம்பியா என்ற நகரில் ஆரம்பிக்கப்பட்டதால் ஒலிம்பிக் போட்டிகள் என அழைக்கப்படலாயிற்று. கி.பி. 394 வரை ஒவ்வொரு நான்கு ஆண்டுகளுக்குமென நடைபெற்று வந்த ஒலிம்பிக் போட்டிகள், வீரர்களுக்கிடையே ஏற்பட்ட கருத்து மோதல்களால் பயங்கரச் சண்டையாக உருமாறியதால் கிரேக்க அரசினுல் தடை செய்யப்பட்டது.

கிரேக்க நாட்டில் மீண்டும் 1896ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பந்தயங்கள் நான்குஆண்டுகளுக்கு ஒருமுறையென இன்றுவரை வெற்றி வாகை சூடுகின்றன.

1916ம் ஆண்டிலும் பின்னர் 2வது உலக யுத்தம் காரணமாக 1940, 1944ம் ஆண்டுகளிலும் ஒலிம்பிக் பந்தயங்கள் நடைபெறவில்லை. ஆரம்பத்தில் ஆண்கள் மட்டுமே பங்குபற்றலாம் என்ற நிலை மாற்றம் செய்யப்பட்டதில் 1912ல் இருந்து பெண்களும் பங்குபற்றய வீராங்கனைகளாக பரிணமிக்கத் தொடங்கினர்.

32 வருடகால தடையின் பின்னர் மீண்டும் இம்முறை கலந்து கொண்ட தென் ஆபிரிக்கா பிரமாதமாக எதனையும் சாதிக்கவில்லை. நமீபியா நாடும் சுதந்திரமடைந்த பின்னர் இம்முறை முதற் தடவையாக பங்குபற்றியது. அரசியல் கருத்து வேறுபாடுகளால் ஒதுங்கியிருந்த கியூபாவும், வட கொரியாவும் இம்முறை போட்டிகளில் ஜமாய்த்தன.

ஆப்கானிஸ்தான் பிரச்சனையால் அமெரிக்கா, தலைமையிலான நாடுகள் 1980ம் ஆண்டு மாஸ்கோவில் நடைபெற்ற ஒலிம்பிக் பந்தயத்தைப் பகிஷ்கரித்த பொழுது கனடாவும் பகிஷ்கரித்தது. பின்னர் 1984ம் ஆண்டு 20 போட்டிகளில் முழு மூச்சுடன் கலந்து கெண்ட கனடா 10 தங்கம், 18 வெள்ளி, 16 வெண்கலப் பதக்கங்களை சுவீகரித்து பெருமை சேர்த்தது. இம்முறை 6 தங்கம், 5 வெள்ளி, 7 வெண்கல பதக்கங்களை தனதாக்கிய கனடா 12ம் இடத்தை வகித்து முன்னணியில் திகழ்ந்தது.

இம்முறை மொத்தம் 18 கனடிய வீரர்கள் பெற்ற பதக்கங்கள், வீரர்களின் பெயர்கள், அவர்களது மாகாணம், பரிசு பெற்ற போட்டிகள் பற்றிய விபரங்கள் கீழே:-

*தங்கப் பதக்கங்கள் -6*

Rowing: Pairs: Marnie McBean, Toronto, and Kathleen Heddle, Vancouver. Fours: Kristen Bames, Victoria; Brenda Taylor, Sidney, B.C.; Jessica Monroe, North Vancouver; Kay Worthington, Toronto. Eight with coxswain: Kristen Bames, Victoria; Brenda Taylor, Sidney, B.C.; Megan Delehanty, Vancouver; Shannon Crawfold, Toronto; Marnie McBean, Toronto; Kay Worthington, Toronto; Jessica Monroe, North Vancouver; Kathleen Heddle, Vancouer; Lesley Thompson, London. Eight with coxswain: John Wallace, Burlington; Bruce Robertson, Victoria; Michael Forgeron, West Vancouver; Darren Barber, Victoria; Robert Mariland, Mississauga; Michael Rascher, Fernie, B.C.; Andy Crosby, Hamilton; Derek Porter, Victoria; Terry Paul, Victoria.

Swimming: 100-meter backstroke: Mark Tewksbury, Calgary.

Track and Field: 110-metre hurdles: Mark McKoy, Toronto.

*வெள்ளிப் பதக்கங்கள் -5*

Boxing: Light-weiterweight: Mark Leduc, Toronto.

Synchronized Swimming

Solo: Sylvie Frechatee, Montreal.

Duet: Penny and Vicky Vilagos, Montreal.

Track and Field: 20 Kilometer racewalk: Guillaume Leblanc, Rimouski, Que.

Wrestlling: Super-heavyweight: Jeff Thue, Port Moody, B.C.

*வெண்கலப் பதக்கங்கள் - 7*

Boxing: Middleweight: Chris Johnson, Kitchner.

Cycling: Individual sprint: Curt Hamett, Thunder Bay.

Judo: Middleweight: Nicolas Gill, Montreal.

Rowing: Single sculls: Silken Laumann, Mississauga.

Swimming: 400-meter medley relay: Mark Tewksbury, Calgary; Jon Cleveland, Calgary; Marcel Gery, Toronto; Stephen Clarke, Brampton.

Track and Field: 3,000 metres: Angela Chalmers, Victoria.

Yachting: Srat: Ross MacDonald, Vancouver, and Eric Jesperson, Sidney, B.C.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் வி. கந்தவனம் தரும்

# கனடியக் காட்சிகள்

## நயாகரா வீழ்ச்சிகள்

இழுமென இழுமென இறங்குது நயகரா (1)
ஏந்துகிருள் நிலத்தாய்!
விழுவன விழுவன இன்பநல் வீழ்ச்சிகள்
விண்ணக விருந்துகளாம்!

விழுகுது திரளுது புரளுது விரையுது
விந்தைகள் புரிகிறதே!
பொழிகிற தெழில்மிகு இயற்கையின் புன்னகை
போதையை ஊட்டுகுதே!

அமுதினைத் தேவர்கள் ஆவலிற் கடைந்திடும்
அற்புத பாற்கடலோ!
சுமைகளை நீக்கிநல் துணைபுரி கடவுளின்
சூக்கும அருள்மழையோ?

அவசரம் அவசரம் ஆயிரம் நடனங்கள்
ஆனந்தப் பரவசமே!
அவசிய வேலைகள் அந்தர மாலைகள்
ஆட்சிசெய் வசியங்களே!

தெறிக்கின்ற திவலைகள் எறிகின்ற வெயிலில்
சித்திர வானவில்லை
குறிக்கின்ற மாயையில் குளித்தெழக் காதலர் (2)
கூடுவர் ஆடுவரே!

திரத்தில் வீரத்தில் பேர்மிக்க அமெரிக்கச்
செல்வ மகள் சிரிப்போ?
நீர் வித்தை காட்ட நினைத்த
நெஞ்சத்து வான்படைப்போ?

தூரத்து நெஞ்சையுந் தொட்டிழுத் தாளும்
சுதந்திரப் பொன்மகளே
ஆரத்தி யாருக்கு ஆபிரகாம் லிங்க
அண்ணலுக்கோ? தகுமே!

உய்யத் தருந்தாருன் ஓங்கார ஓசையில்
உள்ளம் பறிகொடுத்தார்!
வையம் மகிழ்வுற நீயென்றும்
வாழிய வாழியவே!

(வளரும்)

*1. ஓசைக் குறுக்கம்.*
*2. இயற்கை இரசிகருமாம்.*


**ஈழத் தமிழர் தகவல் நிலையத்தின்**
**தொலைபேசிச் செய்திச் சேவை**

**(416) 963-8119**

வருடம் முழுவதும் 24 மணி நேரமும்


# கனடிய மத்திய தேர்தலும் கட்சிகளில் உறுப்பினராவதும்

# FEDERAL ELECTION

கனடாவில் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை மத்திய அரசாங்கத்தைத் தேர்ந்தெடுப்பதற்காக தேர்தல் நடைபெறுவதுண்டு. மத்திய அரசு தேசிய அரசாங்க நிர்வாகப் பொறுப்பினை ஏற்றுக் கொள்ளும் வேளையில், நாட்டின் பாதுகாப்பு, குடிவரவு, வேலை வாய்ப்பு போன்ற துறைகளுக்கும் பொறுப்பாகவுள்ளது. பதினெட்டு வயது நிரம்பிய கனடிய பிரஜைகள் தேர்தலில் தாம் விரும்பிய வேட்பாளருக்கோ அல்லது கட்சிகளுக்கோ வாக்களிப்பதற்கு அருகதையுடையவராவர்.

எதிர்வரும் *14* மாத காலத்திலோ அல்லது அதற்கிடையிலோ பிரதம மந்திரி மல்ரேனி மத்திய அரசுக்கான தேர்தலுக்கு அழைப்பு விடுவார். கன்ஸர்வேடிவ், லிபரல், புது ஜனநாயகக் கட்சி, (N.D.P.) மற்றும் கட்சிகளும் தங்களுடைய கட்சியின் வேட்பாளர்களை தெரிந்தெடுக்கும் முயற்சியில் இப்பொழுது ஈடு படுகிருர்கள். நீங்கள் தெரிந்தெடுக்கும் கட்சியின் வேட்பாள ரைத் தெரியும் தேர்தலுக்கு வாக்களிப்பதற்கு நீங்கள் குடிமகளுக இருக்க வேண்டுமென்பதில்லை. அந்த எல்லைக்குள் வசிப்ப வராக இருப்பது போதுமானது.

அரசியல் வேட்பாளர்கள் பெருந்தொகையான குடியிருப்பாளர்களை சேர்த்து ஒரு தொகுதிக்கு லிபிரல் வேட்பாளரையோ, கொன்சவேட்டிவ் வேட்பாளரையோ, N.D.P. வேட்பாளரையோ தேர்தலுக்கு நியமிப்பதற்கு முயற்சி செய்வார்கள். ஒரு அரசியல் கட்சியில் சேர்வது விரும்பத்தக்கதாயினும், செய்ய முடியாத திட்டங்களை முன்வைத்து உங்களை ஏமாற்ற இடமளிக்காதிர்கள்.

ஒரு அரசியல் கட்சி பிரமுகர் உங்களிடம் வந்து தங்களுடைய கட்சியில் சேர்ந்தால் உங்களுக்கு வேலை கிடைக்கப் பண்ணுகிறேன்; நிரந்தர குடியுரிமை பத்திரம் கிடைக்க செய்வேன்; உங்கள் குடும்பத்தை கனடாவுக்கு வரவழைப்பேன்; அல்லது உத விப்பணத்தை கூட்ட வழி செய்வேன் எனக் கூறிஞல் அதை முற்றுக நம்ப வேண்டாம். அவர்களால் இவற்றை செய்து முடிக்க முடியாதது மட்டுமல்ல இப்படிக் கூறுவது சட்ட விரோத மானதுமாகும். இத்துடன் ஒரு அரசியல் கட்சியில் சேர்வதற்கு அங்கத்துவப் பணம் அறவிடப்படும். இவர்கள் உங்களிடம் பணம் பெருவிட்டால் அல்லது அப்பணத்தை அவர்கள் கட்டியிருந்தால் அவர்கள் சட்ட விரோதமாக செயல்படுவதாகக் கொள்ளலாம்.

# ஈழத்துக் கலைஞருக்கு கனடாவில் வெள்ளி விழா கௌரவம்



சர்வதேசப் புகழ் பெற்ற வானெலி அறிவிப்பாளரும், தலை சிறந்த மேடை, வானெலி திரைப் படக் கலைஞருமான இலங்கை வானெலியின் சிரேஷ்ட அறிவிப்பாளர் பி. எச். அப்துல் ஹமீட் அவர்களின் கலையுலக வெள்ளி விழா கௌரவிப்பு நிகழ்ச்சி கனடாவில் கடந்த மாதம் (ஆகஸ்ட்) 29ம் திகதி நடைபெற்றது. சங்கமம் வானெலி நிகழ்ச்சியாளர்களின் ஆதரவுடன் விஷ்ணுவின் கலையரங்கம் இதனை ஏற்பாடு செய்திருந்தது.

சங்கமத்தின் முதலாண்டு விழா மேடை நிகழ்ச்சிகளில் சிறப்புக் கலைஞராக பங்கு பற்ற வந்திருந்த அப்துல் ஹமீட் அவர்களுக்கு இங்குள்ள கலைஞர்கள், ரசிகர்கள், நேயர்கள் சார்பில் இந்தக் கௌரவம் வழங்கப்பட்டதானது காலமறிந்து அளித்த வெகுமதியாகும்.

கலை என்பது இனம், மதம், மொழி வேறுபாடுகளை கடந்தது. கலைஞர்கள் வாழும் போதே கௌரவிக்கப்படவேண்டும். ஒரு கலைஞருக்கு வாழ் நாளில் கிடைக்கும் மிகப் பெரிய மதிப்பு அவரது சேவைகளை கௌரவிப்பதுதான். இந்த வகைகளில் இருபத்தைந்து ஆண்டுகளைக் கலைக்காக அர்ப்பணித்த இந்தக் கலைஞருக்கு கனடாவில் வழங்கப்பட்ட வெள்ளி விழாக் கௌரவமும் போற்றுதற்குரியது. பாராட்டு விழாவை ஏற்பாடு செய்தவர்களும் பாராட்டப்படவேண்டியவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடிய தமிழரின் வெகுஜன தொடர்பில் ஓர் புதிய அத்தியாயம் - "இளைய நிலா" வீடியோ சஞ்சிகை

# ILEIYA NILAA - A Tamil Video Magazine

கனடாவில் தமிழர்கள் கால் பதிக்காத துறை ஏதாவது உண்டா? என்ற வினாவினை யாரிடமாவது நாம் கேட்டால் "ஒன்றுமில்லை" என்ற பதில் உடனேயே அவர்தம் வாயிலிருந்து வெளிவரும். அந்தளவிற்கு தமிழர்களின் ஈடுபாடு அவர்தம் புகுந்த நாடான கனடாவில் மேலோங்கியுள்ளது. ஆங்கிலப் படமொன்றில் கூட தமிழர்கள் குழுவொன்று நடித்துள்ளது என்றால் அவர்களது திறமை பற்றி எழுதித்தான் தெரிய வேண்டும் என்பதல்ல.

வெகுஜனத் தொடர்புச் சாதனங்களை எடுத்துக்கொண்டால் பத்திரிகை, சஞ்சிகை, வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசிச் செய்திச் சேவை என அனைத்து ஊடகங்கள் மூலமாகவும் தமிழ் மொழி கனடாவில் ஒலித்து வருகின்றது. இதேபோல வர்த்தகத்துறை, ஏற்றுமதி இறக்குமதி, நிதித்துறை, காப்புறுதி.. அப்பப்பா! எழுதிக்கொண்டே போகலாம் போல் உள்ளது. எம் தமிழ் மொழி தலை நுழையாத, தமிழர்கள் கை வைக்காத துறைகளே இங்கு இல்லை எனலாம்.

தமிழ்மொழி மூலமான வீடியோ சஞ்சிகையின் தோற்றம் இந்தியாவில்தான் முதன் முதலில் அறிமுகமானது. அங்கு இவ் வகை வெளியீட்டு முயற்சிகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள்..... அவை தனிமனிதரல்ல... மாறாக பல்வேறு வகையான நவீன வசதிகளைக் கொண்டிருக்கும் பத்திரிகை, சஞ்சிகைகளை வெளியிடும், ஸ்தாபனங்கள். நூற்றுக் கணக்கான ஊழியர்களைக் கொண்டவை. "ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள்" என்பது போல பத்திரிகைத் துறைக்கென உள்ள நிருபர்களையும் புகைப்படக் காரர்களையும் கொண்டு திரட்டப்படும் செய்திகள் வீடியோச் சஞ்சிகையிலும் இடம் பெறுகின்றன.

இங்கு கனடாவிலும், தமிழ் வீடியோ சஞ்சிகையை வெளியிட பலர் முயன்றனர். ஆனால் அவர்கள் முயன்றதோடு மட்டும் நின்றுகொள்ள, தன்னை "இயன்றவன்" என்று எமக்கு இனங்காட்டி "இளைய நிலா" எனும் தமிழ் வீடியோ சஞ்சிகையை வெளியிட்டுள்ளார் கவிஞர் நிலா குகதாசன். இலக்கியம் எழுத்துத் துறை என்பவற்றில் அனுபவத்தைக் கொண்ட இவர் "அக்கினிக் குஞ்சு", குகப்பிரியா" என்று பல்வேறு பெயர்களில் மறைந்திருந்தும் வாசகர்களுக்கு



எழுதிக் கொண்டேயிருப்பது குறிப்பிடத் தக்கது. எந்நேரமும் இயங்கிக் கொண்டிருக்கும் தன்மையும் சுறுசுறுப்பும்மிக்க "நகைச்சுவையாளர்" என நண்பர்களால் அழைக்கப்படும் நாமத்தையும் தாங்கியவர் "கவிஞர் நிலா" .

நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கிய கவிஞர் அ.கந்தசாமி தனது தலைமையுரையில், "அண்மையில் மணவாழ்க்கையில்

**ஆர். என். லோகேந்திரலிங்கம்**

தன்னை இணைத்துக்கொண்ட "நிலா", ஒரு குட்டி நிலாவை படைப்பதற்கு முன்னால் ஒரு இளைய நிலாவை எமக்குத் தந்து எம்மை மகிழ்வித்துள்ளார்" என்று கூறியது மனதைத் தொட்டது.

ஸ்காபுரோ வோர்பன் கல்லூரியில் உள்ள "தியேட்டர்" வடிவிலான நடுத்தர அளவு மண்டபத்தினுள் "மண்டபம் நிறைந்த" இரசிகர்கள் கூடியிருக்க, ஸ்காபுரோ ரூஜ் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு டெரிக் லீ விழாவினை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார். கனடாவில் வதியும் கவிஞர்கள், பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், நாடகக் கலைஞர்கள், நாட்டியக் கலைஞர்கள் என ஒரு "கலைக் குடும்பமே" ஒன்று கூடியிருக்க, தலைவர் கந்தசாமி அவர்கள் தமக்குரிய பாணியில் தலைமையுரையாற்றி நிகழ்ச்சிகளைத் தொடக்கி வைத்தார்.

இயந்திரமான வாழ்வைக் கொண்ட கனடாவில் வதியம் தமிழர்களுக்கென மிதமிஞ்சிய பத்திரிகைகள், வானொலி நிகழ்ச்சிகள் இடம் பெற்றாலும் அவற்றுள் "நின்று நிலைக்கும்" வகையில் வெளியாகும் இலக்கிய முயற்சிகள் பற்றி தலைவர் தமது உரையில் விபரித்தார்.

மெல்லிசைக் கலைஞர் கோணேஷ் தனது குழாத்துடனும் தனது வாத்தியக் கருவிகளோடும் மண்டபத்தினுள் முகாமிட்டிருந்தது இசைக் கலைஞர்களை ஒரு "இசை விருந்தை" எதிர்பார்த்து வாயில் நீர் ஊறவைத்தது. அவ்வாறான ஒரு இசை நிகழ்ச்சி அங்கு இடம் பெறாவிடினும் கலைஞர் ரவி அச்சுதனின் "பல்சுவை விருந்து" சில நிமிட நேரங்களுக்காவது பார்வையாளருக்கு "பரிமாறப்பட்டு" அவர்களை திருத்திப்படுத்தக்கூடியதாக காணப்பட்டது.

இளைய நிலா வீடியோ சஞ்சிகையின் பல பிரதிகள் மண்டபத்தில் வைத்து பெயர் அழைக்கப்பட்டு பலருக்கு வழங்கப்பட்டது. அழகான முறையில் "பொதி" செய்யப்பட்டு கவர்ச்சிகரமான விளம்பரப் பாணியில் காணப்பட்டது பாராட்டுக்குரியதொன்றாகும். மண்டபத்திற்கு கொண்டு வரப்பட்ட அனைத்து வீடியோப் பிரதிகளும் அங்கு விற்பனையானது கவிஞர் நிலா குகதாசனின் கலை இலக்கிய பிரபல்யத்தை பறை சாற்றியது.

விழாவின் இறுதியில் நாற்பத்தைந்து நிமிட நேர வீடியோ நாடாவொன்று பார்வையாளருக்கு திரையிடப்பட்டது. இதில் "இளையநிலா" வீடியோ சஞ்சிகையில் உள்ளடக்கிய செய்திகளின் சுருக்கமான தொகுப்பு இடம் பெற்று பார்வையாளருக்கு சஞ்சிகை அறிமுகம் முயற்சி நிகழ்ந்தது. பிரமிக்கத் தக்க வகையில் செய்தித் தொகுப்பு இல்லாவிடினும்

(மறுபக்கம்) ➡

## இங்கேயுமா இப்படி........ புரியவில்லையே!

"இளையநிலா" வெளியீட்டு விழா நிகழ்ச்சியை மங்கள விளக்கேற்றி ஆரம்பிக்க வந்திருந்த பாராளுமன்ற உறுப்பினருடன் அவரது கட்சிக்காரர் சிலரும் வந்திருந்தனர். அவர்கள் தங்கள் எம்.பி.யின் அரசியல் கட்சியில் சேரவருமாறு விழாவுக்கு வந்திருந்தவர்களை அழைப்பு விடுத்தனர். விண்ணப்பப்பத்திரங்கள் தங்களிடம் ரெடியாக இருப்பதாக பகிரங்கமாக அறிவித்தது, பார்ப்பதற்கும், கேட்பதற்கும் சங்கடமாகவிருந்தது. ஒரு இலக்கியகாரன், எம். பி. ஒருவரை கௌரவத்துக்காக அழைத்தால், எம்.பி.யின் தாஸர்கள் இப்படியா நடந்து கொள்ள வேண்டும். கனடாவிலும் இப்படி நடைபெறுகிறதே. ஆச்சரியம்தான்.........

விழாத் தலைவர் அ. க. அவர்கள் தமது உரையில் "மற்றவர்களைப்போல தயாரித்து வரும் உரையை தாம் வாசிப்பதில்லை என்றும், வழக்கம்போல எதுவுமே கையில் இல்லாது, தாம் நிராயுதபாணியாகவே இங்கு நிற்பதாகவும் சொன்னாரே. இதற்கு என்ன அர்த்தம் "தயாரித்து வரும் என்றால் - மற்றவர்கள் எழுதிக் கொடுப்பதை என்று அர்த்தம் கொள்வதா? அல்லது அவர்களே ஆறுதலாக அமர்ந்து எழுதி வருவதை" என்று அர்த்தம் கொள்வதா? அது சரி- அ. க. அவர்கள் யாரை மனதில் வைத்து இந்த அடி அடித்தார்? அதுவும் வேறு பேச்சாளர்களே இலலாத இந்த "இளைய நிலா" மேடையில்......... புரியவில்லையே.

-சுதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநல உதவிப்பணம் பெறுவோர் தொகை வேகமாக அதிகரிப்பு; ஊழலும் அதிகரிப்பு

# WELFARE ROLL SWELLS TO A RECORD

அகதிகள், அகதிநிலைக் கோரிக்கையாளர்கள் உட்பட வருமானமில்லாதவர்கள் வருமானம் குறைந்தவர்களுக்கு மாதா மாதம் வழங்கப்பட்டுவரும் பொதுநல உதவிப் பணம் (General Welfare) தொடர்பான செய்திகள், தகவல்கள் இப்போது அதிகமாக வெளிவரத் தொடங்கியுள்ளன. மேற்படி நிதி உதவியில் பெரும் மோசடிகள் இடம்பெறுவதாகவும், இந்தப் பணத்தைப் பெறுவதற்காகவென்று பல குடும்பங்கள் பிரிந்து வாழ்வதாக ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுவதாகவும் (இவர்களில் சிலர் ஏற்கனவே அகப்பட்டுள்ளனர்) குற்றம் சாற்றப்பட்டுள்ளனர்.

அதே சமயம், நிதியுதவி பெறுவோர் தொகை ரொக்கட் வேகத்தில் அதிகரித்து வருவதாகவும், இதனைக் கட்டுப்படுத்த முடியாமல் மாநகராட்சி அதிகாரிகள் "மண்டையை இடித்துப் பிளப்பதாகவும்" பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த மாதத்தில் ரொறன்ரோ மாநகராட்சிப் பிரிவில் பொதுநல உதவிப் பணம் பெறுவோர் தொகை கடந்த வருடத்தின் ஜூலை மாதத்துடன் ஒப்பிடுகையில் 115 வீதத்தினால் அதிகரித்துள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

1990 ஜூலை மாதத்தில் சுமார் 50,000 விண்ணப்பங்கள் மட்டுமே பொதுநல உதவிப்பணம் பெற்றுவந்தன. ஆனால் இவ் வருடம் ஜூலை மாதத்தில் விண்ணப்பங்களின் தொகை 106,007 ஆக அதிகரித்துள்ளது. இதன்மூலம் பொதுநல உதவிப் பணம் பெறுபவர்களின் தொகை 172,060 ஆகியுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் பொதுநல உதவிப் பணம் பெறுவோர் தொகை சிறிது குறைந்து வரக் காணப்பட்டது. இதனால் மாநகராட்சி அதிகாரிகள் மகிழ்ச்சியடைந்தனர். ஆனால் ஜூலை மாதத்தில் இது 1.2 வீதத்தினால் திடீரென அதிகரித்தது. அதாவது 2003 பேர் புதிதாக பொதுநல உதவிப் பணத்தில் சேர்ந்து கொண்டனர்.

இவ்வாறு பொதுநல உதவிப் பணம் பெறுவோர் தொகை வெகுவேகமாக அதிகரித்து வருவதால் சமூக சேவைப் பிரிவு ஊழியர்கள் வேலைப்பளு அதிகரித்துள்ளதாகவும், வழமையிலும் பார்க்க, கூடிய அளவு விண்ணப்பங்களை ஊழியர்கள் கவனிக்க வேண்டியுள்ளது என்றும் சமூக சேவைப் பிரிவின் பொது முகாமையாளரான ரேய் லஸானிக் தெரிவிக்கின்றார்.

ரொறன்ரோ மாநகரசபைப் பகுதிக்குள் குடியேறும் அகதிநிலைக் கோரிக்கையாளர்களின் தொகை அதிகரிப்பு, அரசாங்கத்தின் வேலை வாய்ப்பில்லா நிலைமை, ஊழியர்கள் தொழில் இழப்பு ஆகியவைகளால் பொது நல உதவிப் பணம் பெற புதிதாக விண்ணப்பம் செய் வதாகவும் அவர் மேலும் கூறினார்.

**ரஞ்சி**

பொது நல உதவிப் பணம் பெறுபவர்களில் பெண்கள் தொகை அதிகரித்து வருவதையும் புள்ளி விபரங்கள் தெரியப்படுத்தியுள்ளன. வேலை செய்யக் கூடிய தனியான தாய்மார் (Single Mothers), வேலை கிடைக்காததால் பொது நல உதவிக்கு விண்ணப்பம் செய்வது கூடியுள்ளது. கடந்த ஜூலை மாதத்தில் 6.5 வீதத்தினால் இது மேலோங்கியது. அதாவது புதிதாக 550 தனியான தாய்மார் பொதுநல உதவியில் இணைந்துள்ளனர்.

வேலையிழந்தவர்கள், தங்களுக்கான காப்புறுதிப் பணக் கொடுப்பனவுகள், (Unemployment Insurance) முடிவடைந்த பின்னர் முழுமையான பொதுநல உதவிப் பணத்துக்கு விண்ணப்பிக்கின்றனர். அதேசமயம், குடும்ப உதவி (Family Benefit) பெறுவதற்கு மாற்றம் செய்யப் படுபவர்களை, மாகாண குடும்ப உதவி அலுவலகங்கள் உடனடியாக ஏற்றுக் கொள்ள முடியாத நிலையிலிருப்பதால், அவ்வாறான விண்ணப்பதாரிகளை தொடர்ந்தும் பொதுநல உதவியிலேயே வைத்திருக்க வேண்டியுள்ளது. இந்தக் காரணங்களால் பொதுநல உதவி பெறுபவர்கள் தொகை மலைபோல் ஏறிவருகின்றது என்று சமூக சேவைக் கமிஷனர் அலுவலக அதிகாரி ஒருவர் விளக்கமளித்தார்.

மறுபுறத்தில் மற்றும் சில விபரங்களை இதற்குக் காரணமாக ரொறன்ரோ மாநகரசபை அங்கத்தவர் ஒருவர் முன்வைத்துள்ளார். அவர் தெரிவிக்கும் காரணங்கள் கீழ்வருமாறு:-

* பொதுநல உதவிக் கொடுப்பனவில் குறிப்பிடத்தக்களவு ஊழல் இடம் பெறுகின்றது.

* பொதுநல உதவிப்பணம் பெறும் சிலர் வேறு இடங்களில் தொழில் புரிகின்றனர். இதனை அவர்கள் சமூக சேவைத் திணைக்களத்துக்கு தெரியப்படுத்தாமல், மறைத்து நடப்பதால், அவர்கள் தொடர்ந்தும் பொதுநல உதவி பெறமுடிகின்றது.

* திருமணமான சில தம்பதியினர், தங்கள் திருமணத்தை மறைத்து, கணவனும், மனைவியும் தனித்தனியாக பொது நல உதவிக்கு விண்ணப்பிக்கின்றனர். ஏற்கனவே இவ்வாறு பலர் பொதுநல உதவி பெற்றும் வருகின்றனர்.

* அகதிநிலைக் கோரிக்கையாளர் சிலர், இரண்டு மூன்று மாநகரசபைப் பிரிவுகளில் ஒரே சமயத்தில் பொதுநல உதவி பெற்று வருகின்றனர்.

* சமய முறைப்படி திருமணம் செய்து கொண்ட சில தம்பதிகள், பிள்ளைகள் பிறந்த பின்னரும் கூட, பொதுநல உதவிப் பணம் பெறுவதற்காக, திருமணத்தைப் பதிவு செய்யாமல், அதேசமயம் ஒன்றாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

மேற்கூறப்பட்ட விபரங்கள் சரியான முறையில் துப்புத் துலக்கப்படுமானால், இருபத்தைந்து வீதமான பொதுநல உதவி பெறுபவர்கள் ஊழல் வலையில் அகப்படுவார்கள் என்றும் அந்த அங்கத்தவர் தெரிவித்துள்ளார். அவர் கூறுவதிலும் உண்மை இல்லாமலில்லை. தவறான தகவல்களைக் கொடுத்து பொதுநல உதவிப் பணம் பெற்று வந்த சிலர் ஏற்கனவே அகப்பட்டுள்ளனர்.

## கனடிய தமிழரின்.....

(முன் பக்கத் தொடர்ச்சி)

பாராட்டத்தக்க வகையில் காணப்பட்டது இங்கு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய தொன்றாகும். பின்னர் இளையநிலாவை முழுமையாக பார்க்க கிடைத்த சந்தர்ப்பத்தில் பல உண்மைகளை நாம் கண்டு கொள்ளக்கூடியதாகவிருந்தது. கவிஞர் நிலா குகதாசனின் கலை, இலக்கிய துறையிலான நீண்ட அனுபவம் இங்கு" முத்திரை போடப்பட்டிருந்தது. அவர் ஒரு சாதாரண வீடியோ புகைப்படக் கலைஞராக இல்லாமல் எல்லா வகையான கலை இலக்கியக்காரரோடும் உள்ள தனது தொடர்பினை சஞ்சிகையின் தயாரிப்புக்கு பயன்படுத்தியுள்ளார் என்பது தெளிவாகியது. எதையும் தேடிக் கற்றுக் கொள்ள முயலும் தன்மை கொண்ட கவிஞர் நிலா, அவ்வாறான தனது முயற்சிகளை வீடியோ சஞ்சிகையில் இனங் காட்டியுள்ளார். உதாரணமாக, தமிழக கத்து கலைஞரான வைரமுத்துவின் கிடைத்தற்கரிய கவிதையொன்றைப் பெற்று, அதை "கமராக்கவிதை" என்ற பெயரோடு திரையில் பார்க்கவும், கேட்கவும், வைத்த பெருமை நிலாவுக்குரியது.

கனடாவின் "Niagara Falls" நீர் வீழ்ச்சி பற்றிய கவிஞர் வைரமுத்துவின் கவிதையொன்றை தனது கமராவின் மூலம் படைத்த நீர் வீழ்ச்சியின் காட்சிகளோடு இணைத்து... அப்பப்பா... அபாரம்" என்று பாராட்டாமல் இருக்கமுடியாது.

"இளைய நிலாவின் வெளியீட்டு விழா ஒரு இனிய மாலையில் அனைவரையும் கூட வைத்தது . பல பதிய முயற்சிகளை இனங்காண வைத்தது. கலைஞர்களின் ஒத்துழைப்பு இருந்தால் எதனையும் சாதிக்கலாம் என்பதை உணர வைத்தது. நிலா குகதாசன் என்ற கவிஞனின் வீடியோக் கலைத்திறமையினை பறை சாற்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்தம் கலைக்கூடமாக மாற்றம்பெறும் கனடா, றிச்மன்ட்ஹில் இந்து ஆலயம்

# Richmond Hill Hindu Temple Kumbabishekam

**கும்பாபிஷேகப் பெரு விழா சிறப்புக் கட்டுரை**

**நா. சிவலிங்கம்**
தலைவர் - அறங்காவலர் சபை
இந்து ஆலய தேவஸ்தானம்
றிச்மன்ட் ஹில், கனடா

றிச்மன்ட் ஹில் இந்து ஆலய ஸ்ரீ முருகன், ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் கும்பாபிஷேகப் பெரு விழாக்கள் கடந்த மாதம் நடைபெற்று தற்போது மண்டலாபிஷேகம் நடைபெறுகிறது. அதனை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரமாகிறது.

வட அமெரிக்காவின் மிகப் பெரிய இந்து ஆலயமாக பக்திப் பொலிவுடன் றிச்மன்ட்ஹில் இந்து ஆலயம் இன்று மிளிருகின்றது. நித்ய, நைமித்திய பூஜைகளுடன், ஆண்டு முழுவதும் இந்து மத சம்பிரதாயப்படி விசேஷ உற்சவங்கள், குரு பூஜைகள், ஆராதனைகள் இங்கு நடத்தப்படுகின்றன.

வரலாற்றுப் பெருமை காட்டி நிற்கும் இந்து ஆலயத்தின் மகா கும்பாபிஷேக விழாக்கள் கடந்த மாதம் நடைபெற்று தற்போது மண்டலாபிஷேகங்கள் நடைபெறுகின்றன.

"கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று சொல்லி வைத்தார்கள் பெரியவர்கள். "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பது முதுமொழி. தமிழர்களும், இந்துப் பெருமக்களும் எண்ணிக்கையில் பெருமளவு வாழும் மேற்கு நாடுகளில் கனடா இன்று முன்னணியில் நிற்கின்றது. இவ் வகையில் கனடாவை உள்ளடக்கிய வட அமெரிக்காவில் இந்துக் கோவில் அமைக்கப்பட வேண்டிய அவசியம், இரண்டு சகாப்தங்களுக்கு (இருபது ஆண்டுகள்) முன்னரே உதயமானது.

1973ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட "இந்து ஆலய சங்கம்" என்னும் அமைப்பு *1983*ம் ஆண்டு விஜயதசமியன்று ஆலய அமைப்பு வேலைகளுக்கு அத்திவாரமிட்டது எனலாம். *1984*ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஸ்ரீ கணேசர் சந்நிதி உருவானது. மகாபலிபுரத்தில் வடிவமைக்கப்பட்ட ஸ்ரீ கணேசர் விக்கிரகத்தை திரு. நல்லிகுப்புசாமி செட்டியார் அவர்கள் ஆலயத்திற்கு அன்பளிப்பாக வழங்கியிருந்தார். அதே ஆண்டு அக்டோபர் மாதத்தில் *1500* அடி சதுர பரப்புள்ள தற்காலிகமான ஆலய அமைப்பு நிறைவு செய்யப்பட்டது.

*1983*ம் ஆண்டு இலங்கையில் இடம் பெற்ற இனக் கலவரத்தின் பின்னர் பெருமளவிலான இலங்கைத் தமிழர்கள் கனடாவில் குடியேறியதன் பின்னரே, மேற்படி ஆலயத்தின் வளர்ச்சியில் புத்துணர்ச்சி ஏற்பட்டது என்பதை இங்கு முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது எனது கடமையாகும்.

ஆலயத்தின் கட்டட வளர்ச்சி, நாளாந்த நிர்வாகம், தொண்டர்கள் பங்களிப்பு ஆகியவைகளில் இலங்கைத் தமிழர்களின் ஊக்கமும், முயற்சியும் நிச்சயமாக குறிப்பிடப்படவேண்டியவை.

ஆலயத்தின் முக்கியமான திட்ட அமைப்பும், வரைபடங்களும் நீண்ட கால ஆலோசனையின் பின்னர் தீர்மானிக்கப்பட்டு கட்டட வேலைகள் *1987 - 88*ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. கட்டட சிற்பாசார வேலைகள் வாலாஜாபுரத்தைச் சேர்ந்த வி. ஜானகிராம ஸ்தபதி அவர்களால் பொறுப்பேற்கப்பட்டது. எட்டு அடி உயரமான முருகப் பெருமான் விக்கிரத்துடன், அதற்கான மூல சந்நிதி வேலைகள் *1988*ம் ஆண்டு ஜூலை மாதத்தில் நிறைவு செய்யப்பட்டன. அதே வருடம் அக்டோபர் மாதத்தில் ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் மூல சந்நிதி அமைப்பு வேலையும் நிறைவு செய்யப்பட்டது. *1989*ம் ஆண்டில் மற்றைய சந்நிதிகளின் வேலையும் சிறப்பாக நிறைவு கண்டன. மொத்தம் பதின்மூன்று சந்நிதிகளில் தற்போது பூஜை வழிபாடுகள் நடைபெறுகின்றன

இவ்வாலயத்தின் மிகச் சிறப்புக்களில் ஒன்று இந்து மத முறைப்படி முருகன் உட்பட மற்றைய சந்நிதிகள் அமைக்கப்பட்டுள்ள அதே சமயம், வைஷ்ணவ சம்பிரதாயப்படி ஸ்ரீவெங்கடேச பெருமானின் சந்நிதி அமைக்கப்பட்டுள்ளதாகும்.

ஸ்ரீ முருகன், ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் சந்நிதிகளை ஒட்டி இரு பிரதான வாயில்கள் ஆலயத்துக்கு அமைக்கப்பட்டுள்ளன. இராச கோபுரம் 82 அடி உயரம் கொண்டது.

ஆகம விதிப்படியான ஆலய அமைப்பு பூர்த்தியடைந்த பின்னர், இயல், இசை, கலை நிகழ்ச்சிகளுக்கான மகா மண்டபம், ரத கோபுரம் ஆகியவைகளையும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழர்களின் ஒரு கலைக்கூடமாக ஆலயம் மாற்றம் பெற வேண்டும் என்பது எங்கள் பேரவா.

பல லட்சக்கணக்கான ரூபா செலவில் விமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த விமானங்கள் அமைக்கப்பட்டதே ஒரு புதுமையான முறையாகும். மற்றைய ஆலயங்களைப் போன்று விமானக் கட்டட வேலைகள் இங்கு நடைபெறவில்லை. முருகன்,வெங்கடேசப் பெருமானின் சந்நிதிகளின் விமானங்கள் நிலத்தில் வைத்தே செய்யப்பட்டன. பின்னர் புனிதமான நேரத்தில் இவை மேலே ஏற்றப்பட்டன. இதன் பெருமைகள் அனைத்தும் ஸ்தாபதியார் அவர்களையும், அவருடன் இணைந்து செயலாற்றும் குழுவினரையுமே சாரும். இந்தச் சந்தர்ப்பத்தில் கட்டட வேலைகளில் பல சிரமங்களையும் பாராது ஆலோசனைகளையும், வழி காட்டலையும் வழங்கிச் செயற்பட்ட ஆலய அறங்காவலர் சபை உறுப்பினர்களான திருவாளர்கள் கோடீஸ்வரன், விக்கினராஜா ஆகியோருக்கு நன்றி கூறுவது எங்கள் கடமை.

ஆலய அறங்காவலர் சபையின் தலைவராக நான் பணிபுரியக் கிடைத்த காலத்தில், மகா கும்பாபிஷேக, மண்டலாபிஷேக உற்சவங்கள் நடைபெறுவதை எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகவே நான் கருதுகின்றேன்.

எங்கள் ஆலயம் சிறப்பாகவும், ஒழுங்காகவும் செயற்பட எம்முடன் இணைந்து செயற்படும் அர்ச்சகர்கள், மனேஜர்மார், தொண்டர்கள், பக்தர்கள் அனைவருக்கும் இச் சந்தர்ப்பத்தில் மனமார்ந்த நன்றிகளையும் கூற விரும்புகிறேன்.

## றிச்மன்ட்ஹில்இந்து ஆலய இந்த மாத உற்சவங்கள்

றிச்மன்ட்ஹில் இந்து ஆலய (செப்டம்பர்) மாத உற்சவங்கள் விபரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| 1 செவ்வாய் | ரிஷி பஞ்சமி |
| 2 புதன் | சஷ்டி விரதம்<br>முருகன் அபிஷேகம் |
| 5 சனி | ஆவணிமூலம்<br>சிவன் அபிஷேகம் |
| 8 செவ்வாய் | வாமன ஜயந்தி<br>பெருமாள் பூஜை |
| 9 புதன் | பிரதோஷம், மந்தி<br>அபிஷேகம் / சிவ பூஜை.<br>சீரவண உற்சவம்<br>பெருமாள் பூஜை |
| 10 வியாழன் | நடராஜர் அபிஷேகம் |
| 11 வெள்ளி | பூரணை விரதம்<br>சத்யநாராயண பூஷை<br>மஹாளய பஷத்<br>தொடக்கம் |
| 17 வியாழன் | கிருத்திகை விரதம்<br>ஷண்முக அர்ச்சனை |
| 10 சனி | புரட்டாசி சனி (1)<br>சனி அபிஷேகம் |
| 24 வியாழன் | பிரதோஷம்<br>நந்தி அபிஷகம் /<br>சிவபூஷை |
| 26 சனி | புரட்டாசி சனி (2)<br>சனி அபிஷேகம்<br>மஹாளய அமாவாசை |
| 27 ஞாயிறு | நவராத்திரி திருவிழா<br>துர்கா, லக்ஷ்மி, பார்வதி<br>மூனறு அம்மன்<br>சந்நிதியிலும் 9<br>நாட்களுக்கு அபிஷேகம்<br>அபிஷேகப் பூஷை |
| 29 செவ்வாய் | மூர்த்தி விரதம்<br>பிள்ளையார் சகஸ்ரநாமம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் வளர்ச்சியடைந்து விட்ட வயதில் முளைக்கும் 'ஞானப்' பற்கள் பிரச்சனையானவை

## WISDOM TEETH - 3rd MOLAR TEETH

எமக்குக் கடைசியாக முளைக்கும் நான்கு கொடுப்புப் பற்களையும் (3rd Molar teeth) நாம் wisdom teeth என்று அழைக்கின்றோம். அவை எமக்கு ஏறத்தாழ *18* வயதிலிருந்து சுமார் *21* வயது வரையுள்ள காலப்பகுதியில் எமது தாடைகளில் வெளிவருகின்றன. சிலருக்கு இவை மிகவும் தாமதித்தும் முளைக்கின்றன. அவை வளர்ச்சியடைந்த வயதில் முளைப்பதால் அவற்றை நாம் wisdom teeth என்று கூறுகின்றோம்.

இவை ஈற்றில் முளைப்பதால் பொதுவாக இவை தோன்றும் பொழுது தாடையில் இடம் போதாமையால் மற்றைய பற்கள் போல் சீராக வரமுடிவதில்லை. அதனால் இவை கோணலாக முளைக்கின்றன. இதை நாம் Impacted wisdom teeth என்று விபரிக்கின்றோம். இவை முளைக்கின்ற பொழுது பலருக்கு முரசில் நோவு, வீக்கம் போன்ற தாங்கங்களை ஏற்படுத்துகின்றன. ஒருசிலருக்கு இப்பற்கள் அரைகுறையாக வாய்க்குள் தெரிகின்றன. பின்பு சடுதியாக மேற்கூறிய நோவு, வீக்கம் போன்ற விளைவுகளைக் கொடுக்கின்றன. இவர்களின் நாடியில் ஏற்படும் வீக்கங்களை, மருந்துகள் (Antibiotics) பாவிப்பதால் சுகப்படுத்த முடியும். எனினும் இவை பூரணமாகக் குணப்படுத்தப்படுவதில்லை. இவர்களுக்கு மீண்டும் நோவும் வீக்கமும் ஏற்பட இடமுண்டு. பெரும்பாலும் கீழ் தாடையிலேயே (Mandible) இவை பாதிப்பை ஏற்படுத்துகின்றன. சிலருக்கு மேல் தாடையில் (upper jaw-maxilla) முளைக்கும் wisdom பற்களுக்கும் சுகவீனங்களை ஏற்படுத்துகின்றன.

இப்பற்கள் X-கதிர் சோதனையின் பின்பு சிறிய சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்படவேண்டியேற்படுகின்றன (Surgical removal of Impacted teeth). இப்பற்களை அகற்றியபின்பு, ஒருசில நாட்களுக்கு சிலருக்கு நோவு, வீக்கம் ஆகிய சில இடையூறுகள் ஏற்படுகின்றன. ஆனால் இவை நாளடைவில் மருந்துகளின் உதவியுடன் குணமடைகின்றன.



ஞானப் பற்கள்
Wisdom Teeth

Impacted wisdom பற்கள் ஒரு சிலருக்கு தாடையில் நோவை ஏற்படுத்துகின்றன. இது காது நோவையும் தலையிடியையும் ஏற்படுத்த முடியும். இப்பற்கள் முன்னிருக்கும் பற்களை அமுக்குவதால் இவ்விதமான தாக்கங்கள் ஏற்படலாம் என பல்வைத்தியர்கள் கருதுகிறார்கள். எனினும் நோயாளிகளுக்கு வேறு வியாதிகள் (உ+ம்: காது வருத்தம்) ஏதும் இருக்கிறதா என்பதையும் அறிந்து கொள்வது அவசியமாகும்.

இப்பற்கள் தாடையில் முடங்கிக் கிடப்பதால் முன்னிருக்கும் பற்களில் (2nd Molard teeth) வேண்டத்தகாத தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. இப்பற்களிலும் அதற்கு முன்னுள்ள பற்களில் பற்சூத்தை ஏற்படுத்துவதற்கும் ஏதுவாகவிருக்கின்றன.

இப்படியான பற்களால் எமக்கு உபயோகமில்லாத காரணத்தினாலும் (Non functional teeth) இவை எமக்கு இடையூறுகள் விளைவிப்பதாலும் இவை எமது இளம் பராயத்திலேயே அகற்றப்படுவது விரும்பத்தக்கதாகும். இவற்றை அகற்றுவதால் எமது முகம் இடிந்துவிடும் என்று அஞ்ச வேண்டியதில்லை. இளவயதில் இவற்றை அகற்றுவதால் இவை குணமாகும் நேரம் விரைவாகின்றது.

ஒரு சில wisdom teeth கீழ் தாடையில் மிகவும் அடியிலேயே காணப்படுகின்றன. இவை நாடியின் நரம்புக்கு மிகவும் நெருக்கமாக இருப்பதால் இவை சத்திர சிகிச்சை மூலம் அகற்றும் பொழுது நரம்பில் தாக்கமேற்படக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுகிறது. இதனால் சிகிச்சையின் பின்பு இவர்களுக்குத் தாடையின் ஒரு பக்கம் (குறிப்பாக ஒரு பக்கச் சொண்டில்) விறைப்பு ஏற்படுகின்றது. பொதுவாக நாளடைவில் இவர்கள் பழைய உணர்ச்சிகளைப் பெறுகின்றார்கள். ஆனால் இவ்வாறு எல்லோருக்கும் ஏற்படுவதில்லை. X-கதிர் சோதனையின் போது யாருக்கு இப்படியான நிலைமை ஏற்படலாம் என்று பல்வைத்தியர்கள் சிகிச்சையின் முன்பு எடுத்துக் கூறுகின்றார்கள்.

ஒரு சிலருக்கு, wisdom teeth முளைப்பதில்லை. இவை X-கதிர் எடுக்கும் பொழுது அவதானிக்கப்படுகின்றன. எனவே இவர்களுக்கு இப்பற்களை அகற்றவேண்டிய பிரச்சனையே ஏற்படுவதில்லை.

மேலும் சிலருக்கு வேறு பற்களும் தாடையில் இட நெருக்கடி காரணமாக சீராக முளைக்கமுடிவதில்லை. வேட்டைப் பற்களுக்கு (Canine teeth) இந்த நிலைமை ஏற்படுவதுண்டு. சாதாரணமாக இப்பற்கள் அகற்றப்படாது வேறு முறைகளில் சிகிச்சை அளிக்கப்படுகின்றன.

Dr.அ.சண்முகவடிவேல்
குடும்ப பல் வைத்தியர்

# இலவச மருந்து விநியோகத்திலிருந்து 130 மருந்துகள் நீக்கம்

## 130 DRUGS DROPPED FROM DRUG BENEFIT PLAN

Welfare என்று கூறப்படும் பொதுநல உதவிப்பணம், Family benefit என்று கூறப்படும் குடும்ப நல உதவிப்பணம் ஆகியவைகளில் இருப்பவர்களுக்கு, ஒன்ராறியோ மாகாண அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வந்த இலவச மருந்து விநியோகத்தில் பெரும் வெட்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாகாண சுகாதார அமைச்சர் பிரான்ஸிஸ் லங்கின் இதற்கான அறிவித்தலை கடந்த மாதம் *17*ம் திகதி விடுத்தார். தற்போது வெளியாகியுள்ள அறிவித்தலின்படி, *130* வகையான மருந்துகளை இலவச வழங்கல் திட்டத்தின் கீழ் டாக்டர்கள் இனிமேல் எழுதிக் கொடுக்க (Prescription) முடியாது. குறிப்பிட்ட *130* மருந்து வகைகளையும் பணம் கொடுத்தே வாங்க வேண்டும். அதே சமயம், மேற்படி *130* வகையான மருந்து வகைகளை பொதுமக்கள் எவரும் Prescription இல்லாமலே மருந்து விற்பனை நிலையங்களில் பணம் கொடுத்து வாங்க முடியும். இருமல், தடிமன் போன்றவைகளுக்குப் பயன்படுத்தப்படும் மருந்துகள், விட்டமின் குளிசைகள், கலவைகள் இலவச திட்டத்திலிருந்து நீக்கப்பட்ட மருந்து வகைகளுள் முக்கியமானவை. இவ்வாறு *130* வகை மருந்துகளை Drug Benefit Plan லிருந்து நீக்கியதன் மூலம் ஒன்ராறியோ அரசினால் வருடமொன்றுக்கு ஐம்பது மில்லியன் டாலர்களை மீதப்படுத்த முடியும் என்று அமைச்சர் லங்கின் சுட்டிக் காட்டியுள்ளார். கடந்த வருடத்தில் இலவச மருந்து விநியோகத்திற்கு ஒன்ராறியோ அரசாங்கம் பில்லியன் (one Billion) டாலர்களைச் செலவிட்டதாகவும், வருடா வருடம் இந்தத் தொகை *18* வீதத்தினால் அதிகரித்து வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் இலவச மருந்து வெட்டினால் ஒன்ராறியோவில் குடும்பநல உதவியில் தங்கியிருக்கும் சுமார் மூன்று லட்சம் மூத்த பிரஜைகளே (Seniors) மிகவும் மோசமாகப் பாதிக்கப்படப் போவதாக மூத்த பிரஜைகள் சங்கத்தின் தலைவர் Jane Leitch அறிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அமைச்சு அதிகாரிகள் கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை. ஆனால் அமைச்சின் நடவடிக்கைகளைக் கவனிக்குமிடத்து மேலும் சில வகை மருந்துகள் இலவச விநியோகத் திட்டத்திலிருந்து நீக்கப்படலாம் போலத் தெரிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "டாக்டர், என்சினியர்" ஆகிய இரண்டும் மட்டுமே தொழில்கள் என்று எண்ணுவது தமிழர் மரபு!

## IDEALS OF THE EAST AND VALUES OF THE WEST

இந்நாட்டுக் கல்விபற்றி, ரொறன்ரோ பல்கலைக் கழக முன்னை நாள் பேராசிரியர் லோறன்ஸ் ஸ்கொற் என்பவர் ரொறன்ரோ ஸ்ராரில் எழுதிய கட்டுரை ஒன்றில் ஆசியாவில் விளங்கி வரும் கல்வி முறையினை மிகவும் சிலாகித்து எழுதியுள்ளார்.

அங்கு நிலவி வரும் கல்விமுறை மாணவர்களிடம் அதிக அளவிலே எதிர்பார்க்கிறது. எனவே மாணவர்கள் அதிக நேரம் கடினமாக உழைக்கிருர்கள். இதனுல் கூடிய அறிவினைப் பெறுகின்றனர். ஆசிய மாணவர்கள், கனடா மாணவர்களிலும் பார்க்க, கல்வியில் ஈட்டக் கூடிய சாதனையைப் பெரிதும் மதிக்கிருர்கள். ஆசிய மக்கள் வாழ்க்கையை வெறுமனே உரிமையாகக் கொள்ளவதில்லை. சவால்! ஆகவே ஏற்கின்றனர். எனவே அங்கு ஆசிரியர் கற்றல் என்னும் தொழிற்பாட்டிலே முதன்மையாக நிற்கிருர். ஆசிரியர் வகுப்பினுள் முழுமையாகக் கற்பிக்கின்ற படியால் கல்வி உற்சாகமானதாகவும், உயிர்ப்புடையதாகவும் அமைகிறது. அவர்களின் பாரம்பரியம் அறிவிற்கும் ஆற்றலுக்கும் தலை வணக்குவதால், ஆசிரியரின் தலைமையை மதிக்கிருர்கள். அவரும் கல்வியூட்டல் எனும் தன் பணியினைக் கண்ணியமாகச் சளையாது செய்கிருர்.

ஆசிரியர் மைய, வகுப்பு மைய, முயற்சி மையக் கல்வியைப் புறக்கணித்த கனடா, பிள்ளை மைய செயற்றிறன் - அக்கறை மைய கல்வியையே தேர்ந்துள்ளது. இதனுல் ஆசிரியரின் பணியிலேயே ஒரு பாரதூரமான மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆசிரியர் இங்குஒரு தலைவராக அமையமாட்டார். அவர் வெறுமனே ஒரு தொடக்குனராக அல்லது ஊக்குவிப்பவராக மாத்திரமே இயங்குவார்.

பிள்ளை மையக் கல்வி என்பது மாணவர்களின் சுய கௌரவமும் அவன் காட்டும் ஈடுபாடுமே கல்வியின் பிரதான பரிமாணம் என்ற கருத்தின் அடிப்படையிலே இருபதாம் நூற்ருண்டின் முற்பகுயிலே தோன்றிற்று.

பிள்ளை மையக் கல்வியானது மாணவனின் சுய கௌரவத்தை நிலை நிறுத்த முனைவதால் அவன் சித்தியடையா விட்டால் அல்லது குறைந்த பெறுபேறுகளைப் பெற்ருல் அதற்குரிய காரணகர்த்தா ஆசிரியராகவே கொள்கிறது. "பிள்ளைகள் எப்பொழுதும் சுறுசுறுப்புடன் தொழிற்படுவார்கள். எதையும் துருவி ஆராயும் பண்புடையவர். எள்ளளவும் சந்தேகம் இல்லாமல் எதனையும் தெரிய வேண்டும் என்ற இயல்பு கொண்டவர். பார்த்த எதனையும் மனதில் பதியவைக்கும் தன்மை உள்ளவர். எனவே, அவர்களின் குறைந்த பெறுபேறுகட்குக் காரணம் ஒன்றே ஒன்ருகவே அமைய வேண்டும். ஆசிரியர்! அவரது அக்கறை இன்மை, ஏதேச்சாதிகார மனப்பான்மை, அல்லது மாணவர்களைக் கற்றலில் ஈடுபடச் செய்ய முடியாத இயலாமை அல்லது அவர்கட்குச் சலிப்பினை ஏற்படுத்தும் அவரது அணுகுமுறை போன்ற பலகுறைபாடுகள் காரணமாக அமையலாம். எனவே, கனடாவில் இன்றைய கல்வி முறையிலே மாணவனின் சித்தியின்மை கௌரவமாகவே திரைபோடப்பட்டு விடுகிறது. தேர்ச்சி அறிக்கைகள் விதந்துரைப்பவையாகவும், உற்சாகமூட்டுபவையாகவும், மாணவனின் சுய கௌரவத்தை நிலை நிறுத்துவனவாகவும் அமைகின்றன.

ஒரு ஆச்சரிய(!)கரமான உண்மையை நாம் இங்கு உணர வேண்டும். எமது நாட்டிலேயும் பிள்ளைமையக் கல்வி உள்ளது என்று நாம் கழுதையாகக் கத்தினுலும் இங்கு உள்ள கல்வி வல்லுனர்கள் அதைக் கண்டு கொள்வதில்லை. அங்கு நடைபெறுவது ஆசிரிய மையக் கல்வி என்பதே அவர்கள் கணிப்பு. அப்படி அவர்கள் கருதுவதற்கும் இடம் உண்டு. ஏன் என்பதை நீங்கள் உணர்வீர்கள்.

யோன் ஸ்ராக்கவுஸ் என்னும் பத்திரிகை நிருபர் டெல்கியில் உள்ள ஒரு ஆரம்பப் பாடசாலை பற்றி விதந்துரைக்கிருர். அங்கு கீழைத்தேயக் குறிக்கோள்களும், மேலைத்தேய எண்ணங்களும நிலை நாட்டப்பட்டுள்ளன என்கிருர். இக்கரைக்கு அக்கரை பச்சையாகத் தெரிகிறது.


பொ.கனகசபாபதி
(மகாஜனு கல்லூரி முன்னுள் அதிபர்)


எமது நாட்டு கல்வி முறையிலே சில முரண்பாடுகள் இருக்கவே செய்கின்றன.

சென்ற மூன்று வருடங்களிலே நான் வடக்கு யோர்க்கினை சார்ந்த 500 மாணவர்களுடனுவது உரையாடி இருப்பேன். அவர்கள் நம் நாட்டில் இருந்து இங்கு அண்மையில் வந்தவர்கள். அவர்களிடம் நான் கேட்ட ஒரு கேள்வி, "நீர் பெரியவனுக வந்ததும் என்ன தொழில் செய்ய விரும்புகிறீர்" என்பது. குறைந்தது 480 பேர்களாவது டாக்டர் அல்லது எஞ்சினியர் என்றே கூறினுர்கள். இவை இரண்டுமே தொழில்கள். ஏனைய யாவும் வெறும் வேலைகளே என்பது தொன்று தொட்டு எமது உணர்விலே கலந்து விட்ட மனவருத்தமான உண்மை. இன்னும் பரபரப்பானதும், மூளைக்குச் சவால் விடக் கூடியதுமான பல தொழில்கள் உள்ளன என்பதை நாம் உணரவில்லை அல்லது உணரும் நிலையில் இல்லை. எனவே அங்கிருந்து இங்குவந்த உடனே பல பிள்ளைகட்கு இந்த மனுேநிலை இருக்கிறது. காலப்போக்கிலே அவர்கள் உளப்பாங்கிலே மாற்றம் ஏற்படுவதைக் காணமுடியும் இதற்குரிய அடிப்படைக் காரணம், பிள்ளைகளுடைய படிப்பு சம்பந்தமான முடிவினை அதிக பெற்ருேர் தாமாகவே எடுப்பதாகும். தம்மால் முடியாததை தம் பிள்ளைகளைக் கொண்டு சாதிக்கும் திட்டமுறை (Parental Projection) ஆரம்பக் கல்வியிலிருந்தே ஆரம்பமாகி விடுகிறது. பெற்ருேர்கள் பிள்ளைகளின் கல்வி பற்றி வழிகாட்டலாமே அன்றி நெறிப்படுத்தல் ஆகாது.

இந்நாட்டிலே பாடசாலைகளிலே ஆசிரிய ஆலோசகர்கள் உள்ளனர். அவர்கள் மாணவர் தகமை அறிந்து அதற்கேற்ப வழிப்படுத்துகிருர்கள். பிள்ளைகளும் தமக்கு ஏற்ற, மனதில் லயிக்கும் நெறியினைத் தெரிந்து உற்சகாமுடன் கற்க முனைகின்றனர்.

எம்நாட்டுக் கல்வித் திட்டத்திலே கண்ட இன்னுெரு குறை, மிக்க ஆரம்பத்திலேயே மாணவர்கள் கற்கை நெறிகளைத் தெரிந்து கொள்வதே. இதனுலே 10ம் தரம் சித்தியடைந்து 11ம் தரம் வந்த உடனேயே ஒரு குறிப்பிட்ட கற்கை நெறியினை மாணவன் தேர்ந்து கொள்கிருன். அதைச் சார்ந்த நான்கு பாடங்களை மட்டுமே கற்று, பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலே பல்கலைக் கழகத்திற்கு குறிப்பிட்ட ஒரு துறையினில் பயிற்சி பெறச் செல்கிருன். இதன் விளைவாக அவன் கல்வி கற்ற நான்கு பாடங்களில் மாத்திரம் ஆழமானதாகின்றதே தவிர பொதுவான அறிவுத் திறன் விசாலமானதாக அமையும் சாத்தியம் ஏற்படுவதில்லை. இந்நாட்டிலே அந்த நிலை ஏற்படுவதில்லை. பல்கலைக் கழகம் புகும் பொழுதே மாணவர் தம் கற்கை நெறிகளைத் தெரிவு செய்கிருர்கள். பல்கலைக் கழகம் புகுவதற்குத் தேவையான மிகக் குறைந்த 30 விசேட சித்திகளில் 6 மாத்திரமே 9ம், 10ம், வகுப்புகளில் பெற முடியும். மிகுதி 14ங்கினையும் 11, 12, 13ம் தரங்களிலேயும் பெற வேண்டும். இவ் வகுப்புகளிலே பல பாடங்களைக் கற்பதனுல் அவர்களுடைய அறிவு விசாலமானதாக அமைவதுடன் படு வேகமாக முன்னேறி வருகின்ற விஞ்ஞான யுகத்திலே, மாணவர் பின் தள்ளப்படாமல் நிமிர்ந்து நின்று எத்தகைய சவாலினையும் உள்ளத் திண்மையுடன் எதிர்க்கும் ஆற்றல் பெறுகின்றனர்.

மாணவர்கள் சுயமாகச் சிந்தித்துச் செயற்படும் ஆற்றல் பெரும் அளவில் ஊக்குவிக்கப்படுகிறது. இந்த ஆதரவும் உதவிக்கரமும் மாணவர்களைத் துணிகரமான முயற்சிகளிலே ஈடுபடச் செய்கிறது. பேராதரவும் பெறுகிறது. எறின் ரீச்சவட் (Erin Teachout) எனும் 13 வயது நிரம்பிய பெண் பிள்ளை செய்த ஆராய்ச்சி பற்றிய செய்தி ரொறன்ரோ ஸ்ராரில் வந்த பொழுது பலர் வாயை பிளந்திருப்பீர்கள்.

மறுபக்கம் ➡



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழகம் புகுவோர் அனைவரும் பட்டம் பெறுவதில்லை

(முன் பக்கத் தொடர்ச்சி)

விஞ்ஞான பாடத்திலே இம் மாணவி செய்த ஆய்வு, கருத்தடை உறைகள் சம்பந்தமானது. அவற்றின் வலு, அளவு, ஒழுகும் தன்மை பற்றி ஆய்வு செய்து போட்டியில் முதற் பரிசினையும் தட்டிச் சென்று விட்டார். எமது சமூகத்திலே இத்தனை துணிகரமான ஆராய்ச்சி ஒன்றை ஓர் பெண்பிள்ளை செய்ய முடியுமா? செய்வதென்ன? அப்படிச் சிந்தித்தே தவறு என எத்தனை வசவுகள் அவரை வந்தடைந்திருக்கும். அப்பிள்ளையின் தாயார் இவ்விடயத்தில் தான் பூரண ஆதரவு மகளுக்குத் தந்ததாகக் கூறுகிறார். நம்மவர்கள் என்றால் பிள்ளைக்கு குறைந்தது இரண்டு சாத்து சாத்தியிருப்பார்கள்.

இத்தகைய கல்வி முறை மாணவரின் சுய கௌரவத்தைப் பேணுவதுடன் அவர்கள் தன்னம்பிக்கை உடையோராகவும் திடசங்கல்பம் கொண்டோராகவும் வளர்வதற்கு உடந்தையாக இந்நாட்டின் பாடசாலை நிர்வாக நடைமுறைகளில் சில நிகழ்வுகள் அமைகின்றன. ஒவ்வொரு மாணவனும் பல்கலைக் கழகம் புகுவதற்கு முன்னர் மூன்று முறை பட்டமளிப்பு விழாவில் பங்கு கொள்கிறார்கள். ஒன்று ஆரம்பப் பாடசாலையை விட்டு நீங்கி கனிஷ்ட பாடசாலைக்கு செல்கையில், 6ந் தர முடிவில். இரண்டாவது கனிஷ்ட பாடசாலை செல்லும் பொழுது 8ந்தர முடிவில். இறுதியாக 13ந் தரம் முடிந்து பல்கலைக் கழகம் புகும் பொழுது. ஒவ்வொரு முறையும் பட்டமளிப்பு மிகவும் பாங்காக நடைபெறுகிறது. மாணவன் தான் ஏதோ சாதித்து விட்டதாக உணர்கிறான். சமூகத்திலே தனக்கு ஒரு அந்தஸ்து கிடைத்து விட்டது என எண்ணுகிறான். அதன் தன்னம்பிக்கை சிறுகச் சிறுக வலுப் பெறுவதை அவன் நடை உடை பாவனையிலிருந்தே கணிக்க முடியும். இநத மாற்றத்திற்கு பாடசாலை அதிபர், ஆசிரியர் பெரும் துணை நிற்கின்றனர்.

எனது மகள், போலின் ஆரம்பப் பாடசாலையில் ஆறாம் தரம்முடித்து கனிஷ்ட பாடசாலைக்குச் செல்லவுள்ளா. அவரின் பட்டமளிப்பிற்கு நான் சென்றிருந்தேன். பாடசாலை அதிபரின் செயல் என்னைத் திகைக்க வைத்தது. பட்டம் பெற்ற ஒவ்வொரு மாணவரையும் மேடையின் கரையிலே கையைப் பிடித்தபடி குறைந்தது மூன்று நிமிஷமாவது உரையாடினார். என்னடா இந்த மனுஷன் செய்கிறான் என என் மனம் அங்கலாய்த்தது. எமது நாட்டிலே இப்படி ஒரு அதிபர் செய்திருப்பாரா? ஆறாம் தரம்தானே? இது ஒரு படிப்பா? என எண்ணுவோம். ஆனால் இந்த அதிபரின் செயல் மாணவர் மத்தியிலே எத்தனை தன்னம்பிக்கையை ஏற்படுத்தியிருக்க முடியும் என்பதை நாம் உணர வேண்டும்.

அதே அதிபர் சம்பந்தமான இன்னொரு நிகழ்ச்சியையும் இங்கு கூறுவது, மாணவர் சம்பந்தமான அவர்கள் ஈடுபாட்டினைக் காட்டவே. பட்டமளிப்பு விழாவிலே அந்த அதிபருடன் நான் பேசும் பொழுது எனது மகளிற்கு விடுமுறையில் நடைபெறவுள்ள அறுவைச் சிகிச்சை பற்றிக் கூறினேன். அவரும் தனது வாழ்த்துக்களைக் கூறிச் சென்று விட்டார். அறுவைச் சிகிச்சை நடைபெற்று சில தினங்களிலே அவர் வைத்தியசாலையுடன் தொடர்பு கொண்டு மகளின் நிலைபற்றிக் கேட்டுள்ளார். அவர்கள் நாம் வீடு சென்று விட்டதாகச் சொன்னதும் வீட்டில் என்னோடு தொடர்பு கொண்டு மகளின் நலன் பற்றி வினவினார். கடைசியில் தான் விசாரித்ததாக என் மகளுக்குத் தெரிவிக்க கோரினார். இத்தகைய செயல்கள் மாணவர்களுக்கு தம் சுயமதிப்பை எந்த அளவினுக்கு உயர்த்தும் என நாம் உணர வேண்டும்.

எனது மருமகன் குவீன் விக்ரோறியா ஆரம்ப பாடசாலையிலே வருகிற வருடம் நான்காம் வகுப்பிலே படிக்கவுள்ளார். அவரின் வகுப்பாசிரியர் விடுமுறைக்கு அலாஸ்கா சென்றுள்ளார். அங்கிருந்து அவர் தனது மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் கடிதம் எழுதியதுடன், அவர்கள் விடுமுறையை எங்ஙனம் களிக்கிறார்கள் என வினவியும் உள்ளார். ஆசிரியர் அதிபர்களுடைய இத்தகைய ஈடுபாடு மாணவரின் முழுமையான ஆளுமையை விருத்தி செய்ய உதவுவதோடு ஆசிரியரை மாதிரியாக ஏற்க மாணவர் உள்ளத்தினில் ஒரு அவாவினை ஏற்படுத்தவே செய்யும்.

நல்லவற்றை மாத்திரம் சொல்லிக் கொண்டே இருக்கப்படாது. எனவே கூடாதது ஒன்றையும் இங்கே கூற வேண்டும். கனடாவில் பல்கலைக் கழகம் புகும் மாணவர்களில் 40 வீதமானோர் குறிப்பிட்ட காலத்தில் பட்டம் பெறுவதில்லை. ஏறக்குறைய 24 சத வீதமானோர் முதல் வருடத்திலேலேயே பட்டப் படிப்பினை விட்டு விடுகின்றனர். இதற்குரிய காரணங்கள் என்ன? பல கூறப்படலாம். என்னைப் பொறுத்த மட்டிலே இதற்கு ஒரேயொரு காரணம் இந்நாட்டில் நடைபெறும் கல்விமுறை.

வெறுமனே பாடசாலை மட்டத்திலே மதிப்பீடு செய்யப்பட்டு அதன் அடிப்படையிலே மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கு தெரிவு செய்யப்படுவதால், பல்கலை கழகக் கல்விக்கு அருகதை அற்ற பலர் அங்கு சென்று விடுகின்றனர். அவர்களால் பல்கலைக் கழகத்தின் எதிர்பார்ப்புகட்கு ஈடு கொடுக்க முடிவதில்லை. எனவே விட்டு விலகி விடுகின்றனர். மாகாண ரீதியாகவோ அல்லது தேசிய ரீதியாகவோ ஒரு "தகமைகாண் பரீட்சை நடத்தி அதன் அடிப்படையிலே மாணவர்கள் பலகலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்படுவார்களானால் இத்தகை நிலை ஏற்படமாட்டாது என்றே எண்ணுகிறேன்.

தகுதியுடையோர் மாத்திரமே தெரிவு செய்யப்படுவர். பாடசாலை மட்டத்திலே ஒரு பரீட்சை நடாத்தப்படுகிறதே எனச் சிலர் கேட்கலாம். நாமே படிப்பித்து நாமே பரீட்சித்தால் நாம் எதைப் படிப்பிக்கிறோமோ அதற்குள்ளேதான் பரீட்சை. குறிப்பிட்ட ஒரு பாட நெறியிலே அருகருகே உள்ள இருபாடசாலைகட்குள்ளேயே கற்பிக்கப்பட்ட பாட அளவுகளிலே அதிக வேற்றுமை காணுதல் சாத்தியம்.

எமது நாட்டிலே ஒரு பொதுப் பரீட்சை வைக்கப்படுகின்ற காரணத்தினாலே திறமை உள்ளோர் (தரப்படுத்த முன்னர்) தெரிவு செய்யப்படுகின்றனர். எனவே அங்கு சென்ற பின்னர் விட்டு விலகுகின்றவர்கள் தொகை மிகக் குறைவு.

இங்கு பதின்மூன்றாந்த தரத்திலே பெறுகின்ற கல்வி அறிவினிற்கும் பல்கலைக் கழக முதல் வருடத்திலே கற்பிக்கப்படுவதற்குமிடையே கடின நிலை வேறுபாடு மிக அதிகம். எனவே மாணவரின் பெயர்ச்சி (Transition) சுமுகமாக அமைவதில்லை. எமது நாட்டிலே உயர்தர வகுப்பிற்கும் பல்கலைக் கழக முதல் வருடத்திற்குமிடையே கடின நிலையில் பாரதூரமான வித்தியாசமில்லாமையால் மாணவனின் பெயர்ச்சி சுமுகமாகவே உள்ளது.

பொதுப் பரீட்சை வைப்பதிலும் ஒரு இக்கட்டு இருக்கவே செய்கிறது. குறிப்பிட்ட ஒரு பாட நெறியினைப் போதிக்கும் எல்லா ஆசிரியர்களும் ஒரே ஆற்றல் உள்ளவர்களாக அமைவதில்லை இதனால் பொதுப் பரீட்சையிலே ஆசிரியரின் குறை பாட்டினால் மாணவர் பாதிக்கக் கூடிய நிலை ஏற்பட்டலாம். இதைத் தவிர்க்க ஒரு புதிய கலாசாரம் இங்கும் ஆரம்பமாகலாம்.

அதுதான் பிரத்தியேக பாட போதனை! இது தேவையா?

## குடிவரவு, அகதிகள் சபையின் தலைவராக பெண்மணி நியமனம்

கனடிய குடிவரவு அகதிகள் சபையின் (I.R.B.) தலைவராக கடந்த நான்கு வருடங்களாக கடமையாற்றிய திரு. Gordon Fairweather ஓய்வு பெறுகிறார். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான இவர் (69 வயது) 1989ம் ஆண்டில் மேற்படி சபை அமைக்கப்பட்டபோது இதன் முதலாவது தலைவராக நியமனமானார்.

புதிய தலைவராக 44 வயதான நூர்ஜகான் மவானி (Nurjehan Mawani) நியமனமாகின்றார். வழக்கறிஞரான இந்தப் பெண்மணி, தற்போது மேற்படி சபையின் பிரதித் தலைவர்களில் ஒருவராக, வான்கூவரில் பணி புரிகின்றார். இவர் 1986 முதல் 1989ம் ஆண்டு வரை குடிவரவு மேன்முறையீட்டுச் சபையின் உப தலைவராகவும் பணி புரிந்தவர். நூர்ஜகான் கென்யா நாட்டில் பிறந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஸ்.தி.அகிலன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி முடிவுகள்

## S.T. AHILAN MEMORIAL CRICKET TOURNAMENT





எஸ்.தி.அகிலன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக, மிஸிஸாகா டிக்ஸி கிரிக்கெட் கிளப் நடத்திய இருபது ஓவர்கள் மென்பந்து (கிரிக்கெட்) சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டமும், பரிசளிப்பு விழாவும் ஆகஸ்ட் மாதம் 3ம் திகதி திங்கட்கிழமை முழுநாள் நிகழ்ச்சியாக மிஸிஸாகாவில் இடம் பெற்றது.

இறுதிப் போட்டியில் டிக்ஸி கிரிக்கெட் கிளப்பும், லெவன் *(11)*ஸ்டார் விளையாட்டுக் கழகமும் பங்குபற்றி, இரண்டும் "இணை சம்பியன்களாகி" வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டன.

கனடா தமிழர் தேசிய மன்றம், கனடா இந்து ஆலய அறங் காவலர் சபை ஆகியவைகளின் தலைவரான திரு.நா.சிவலிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கினர்.



யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியின் மாணவர் தலைவனுகவும், முன்னணிக் கிரிக்கெட் வீரனுகவும், கல்லூரியின் கிரிக்கெட் அணித் தலைவனுகவும் ஐந்து ஆண்டுகளிருந்து *1989*ம் ஆண்டில் அகால மரணமான அகிலனின் கல்வி, விளையாட்டு, சமுகசேவைப் பண்புகளை பிரதம விருந்தினர் தமதுரையில் சுட்டிக் காட்டினர். சிறப்பு விருந்தினர்களில் ஒருவராக கலந்து கொண்ட திரு. அருள் எஸ். அருளையா அவர்களும் இங்கு உரையாற்றினர்.

"அகிலன் அசோஷியேட்ஸ்" நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட வெள்ளிக் கிண்ணங்களில் முக்கியமான கிண்ணங்களைப் பெற்றுக் கொண்டவர்களின் விபரங்கள் வருமாறு:

**சிறந்த ஒத்துழைப்புக்குழு:** கொக்குவில் விளையாட்டுக் கழகம்

**சிறப்பாக முன்னேற்றமடைந்துள்ள குழு:** யுரனஸ் கிரிக்கட் கழகம்

**முதற் சுற்றில் வெற்றி பெருத குழுவுக்கான ஆறுதல் பரிசு:** வின்கார்டின் கிரிக்கெட் கிளப்.

**முழுப்போட்டிகளிலும் மிகக் கூடுதலான ஓட்டங்களைப் பெற்றவருக்கான பரிசு:**
திரு.ரெட்டி (லெவன் ஸ்டார் கிரிக்கெட் கிளப்)
திரு.கருணுகரன் (டிக்ஸி கிரிக்கெட் கிளப்)

**முழுப்போட்டிகளிலும் கூடுதலான விக்கட்டுக்களை வீழ்த்தியவர்களுக்கான பரிசுகள்:**
திரு. பாலா (கொக்குவில் விளையாட்டுக் கழகம்)
திரு. விக்கி (யுரனஸ் விளையாட்டுக் கழகம்)

**முழுப்போட்டிகளிலும் மிகச் சிறந்தவர்களுக்கான கிண்ணங்களைச் சுவீகரித்துக் கொண்டவர்கள்:-**

* சிறந்த துடுப்படிகாரர் - Best Batsman of the Series: திரு.யோகானந்தன் (டிக்ஸி கிரிக்கெட் கிளப்)

* சிறந்த பந்து வீச்சாளர்- Best Bowler of the Series: திரு.தங்கராசா சிறீஸ்கந்தராசா (டிக்ஸி கிரிக்கெட் கிளப்)

சிறந்த மைதான வீரர்-Best Fielder: திரு.நவா (டிக்ஸி கிரிக்கெட் கிளப்)

பல்துறை கிரிக்கெட் வீரன்- Best All Rounder: திரு.சிறீ (லெவன் ஸ்டார் கிரிக்கெட் கிளப்)

எஸ்.தி.அகிலன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான மேற்படி கிரிக்கெட் போட்டி *1991*ம் ஆண்டிலிருந்து நடைபெறுகின்றது. கடந்த வருடம் டிக்ஸி கிரிக்கெட் கிளப் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. இந்த வருடம் போட்டியில் மொத்தம் *31* கழகங்கள் பங்குபற்றி ஒரு சாதனையை நிலைநாட்டின. பரிசளிப்பு நிகழ்ச்சியின் சில படங்கள் இப்பக்கத்தில் பிரசுரமாகியுள்ளன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கமம் முதலாண்டு விழாக்கள் இ
# ஈழத்துக் கலைஞர்களின் கூட்டு முயற்

இப்போதெல்லாம் வார இறுதி நாட்களை எங்கு கழிப்பது, எவ்வாறு கழிப்பது, என்பது எமது மக்களுக்கு இங்கு ஒரு பிரச்சனையாகிவிட்டது. பல்வேறு வகையான தமிழர் கலை கலாசார விழாக்கள், விளையாட்டு நிகழ்சிகள், சமய சம்பந்தமான உற்சவங்கள்; அதைவிட தனிப்பட்ட உறவு ரீதியிலான திருமணம், பிறந்த தின விழாக்கள்....... அப்பப்பா இந்த இரண்டு நாட்களிலும் எப்படி இவ்வளவு நிகழ்ச்சிகளைச் சமாளிப்பது என்று பிரச்சனை எழுதுவதிலே நியாயமும் இருக்கத்தான் செய்கிறது,



கடந்த மாதம் 15ம், 22ம் திகதிகளிலும் இதே நிலைதான்! எனினும் எந்த நிகழ்ச்சிக்குச் செல்வது என்பது இந்த இரு நாட்களிலும் அவ்வளவு பிரச்சனையாக இருக்கவில்லை. நாங்கள் மொத்தம் மூவர். மூவரும் வெவ்வேறு கோணங்களில், வெவ்வேறு நேரங்களில், வெவ்வேறு பார்வையுடன் ஒரே நிகழ்ச்சியை தெரிவு செய்தோம். அது "சங்கமம்" ஆண்டு விழா நிகழ்ச்சிகள்தான். கடந்த ஓராண்டு காலமாக வானலைகளில் தவழ்ந்து வந்த கனடிய தமிழ்க் கலைஞர்களை நேரில் காணலாம் என்னும் தவிப்பு:...... திட்டமிட்டு பல நாட்களாக... இல்லை......... வாரங்களாக ஒத்திகை பார்க்கப்பட்ட கலை நிகழ்ச்சிகளை மேடையேற்றும் இவ் விழாவை எப்படித் தவிர்க்க மனம் வரும்? இளைய தமிழ் நெஞ்சங்களின் வான் புகழ் இனிமையான இளைய பாரதியின் மேடை நிகழ்ச்சிகளைப் பார்க்க......... இதைவிட மேலாக ஈழத்தின் பிரபல தமிழ் அறிவிப்பாளரும் கலைஞருமான பி. எச். அப்துல் ஹமீட் நேரடியாகக் கலந்து கொள்ளும் விழாவினை ரசிக்க ........... மொத்தம் ஆறு கண்கள் .. ஆறு காதுகள் சகிதம் முதலில் மிஸிஸ்ஸாகா கௌதரா பாடசாலை மண்டபத்திற்குள் (ஆகஸ்ட் 15) சென்றோம். அச்சொட்டாக ஆறு மணிக்கே நிகழ்ச்சிகள் ஆரம்பித்தன. அடுத்த அறுபது நிமிடங்களுக்குள் சனத்திரளினால் மண்டபம் நிரம்பி வழிந்தது. கதவுப் பாதைகளில், படிகளில், நிலத்தினில் எங்குமே ரசிகர்கள் மொய்த்திருந்தனர்.



22ம் திகதிய விழாவும், 15ம் திகதிய விழாவும் ஏறத்தாழ ஒரே நிகழ்ச்சிகளையே கொண்டிருந்ததால் குறிப்பிட்ட சில நிகழ்ச்சிகள் பற்றி பின்னர் கவனிப்போம். 15ம் திகதிய விழாவில் அறுதைப் பிள்ளை போல நெருக்குதலுக்குள்ளான ஒரு நிகழ்ச்சி "சொற்போர்". பிரபல கல்விமான்களில் ஒருவரான திரு. பொ. கனகசபாபதி (மகாஜன முன்னாள் அதிபர்) இதற்குத் தலைமை தாங்கினார். விழாத் தலைவர் என்று கூறப்படும் ஒருவர் அடிக்கடி மேடைக்குச் சென்று திரு. கனகசபாபதி அவர்களுடன் குசுகுசுக்கும்போது எல்லாருக்கும் புரிகிறது. பாவம் திரு. கனகசபாபதி அவர்கள். தமது தொகுப்புரையை ஒரு நிமிடத்தில் முடித்துவிட்டு, அவசரம் அவசரமாகப் போகும் நிலை.

மற்றும்படி சகல நிகழ்ச்சிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை போட்டி போட்டு நிருபித்தன. ஆறு மணிக்கு ஆரம்பமான விழா நள்ளிரவு பன்னிரெண்டு தாண்டிய வரை நடைபெற்றது. ஆறு மணித்தியாலங்கள் மண்டபம் நிறைந்த கரகோஷங்களுடன், அப்துல் ஹமீட்டின் தேனமிர்தம் போன்ற தொகுப்புரையுடன் நடைபெற்று இனிமையாக முடிவடைந்தது விழா. இவ் வைபவத்திற்கு மிகமிகப் பொருத்தமான இலக்கியகாரரும், தமிழர் தகவலின் இந்த வருடத்திற்கான இலக்கிய விருதினைப் பெற்றவருமான திரு. க. தா.செல்வராஜகோபால் (ஈழத்துப் பூராடனார்) விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். இது அவருக்கு வழங்கப்பட்ட கௌரவமும் கூட.




சங்கமத்தின் இரண்டாவது விழாவுக்கு ஐந்து மணிக்கே சென்று விட்டோம். முதல் விழாவில் கிடைத்த அனுபவம். என்ன ஆச்சரியம், நுழை வாசலில், குத்து விளக்கு ஏற்றுவதற்கான இடத்தில் நின்று, ஒருவர் சகல ஏற்பாடுகளையும் மும்முரமாக கவனித்துக்கொண்டிருக்கிறார்.

அடேய்! எங்கள் அப்துல் ஹமீத்! ஓ... அவரும் சங்கமக் குடும்பத்தின் ஒரு அங்கத்தவரல்லவா?

சிலவேளை ஸ்காபுரோ என்பதால் செ
மாகலாம் என்று எண்ணி வெளிே
டும் மண்டப வாசலுக்கு செல்கின்றே
டம் காணப்படவில்லை. "மிஸிஸாகா

மூவர் பார்
## செல்வா + லோ

ஸ்காபுரோ படுக்கச் செய்து விடு
காதோடு காதாக முணுமுணுத்த வா
தொடங்க ஏழு மணியாகும் என்று
லேயே நின்றோம்.

அடுத்த ஐந்து நிமிடத்தில்...... மண்ட
கம்பீரமான குரல் ஒன்றின் அறிவ
பலத்த கரகோஷமும் மண்டபத்தை
பின்னர் எம்மை நிதானித்துக்
நுளைந்து, வெற்றிடம் தெரியாத நிலை
பட்ட ஆசனங்களில் அமர்ந்து கொண்

தலைமையுரையை அடுத்து அப்துல் ஹ
பெற்றபோது இடியோசை போல ர



கட்டடத்தையும்
வைத்தது. தன
வதனத்துடன,
உதிரவிட்டு,
யாக்கி.......... அ
களை அறிமுகம்
புறத்தே நடன
லான நிகழ்சிக
றிக்கு ஈடு கொ
புரையும்ஆலா
மும போல
இரண்டும் இ
நாள் விழாவும்

விழாவில் இட
அநேகமாக எ
ஒலிபரப்பான
னமாடினாலும்
நடனமாடிய க
வாசுவினது ந
கவர்ந்தது. கார
எல்வித ஆடம்
லாமல் எளி
மேடையில் தோன்றி தனது பங்க
பது ஒரு மனிதனின் உடல் ரீதியிலா
யும் உணர்வுகளையும் ஆக்கிரமித்துக்
கலைஞர் வாசுவினது உன்னத நடன

அடுத்தது விவாத அரங்கு. எமது த
பெயர்ந்து இங்கு குடியேறியுள்ள
அமைத்துக் கொடுக்க வேண்டும்
பட்டதுபோல, தாங்கள் ஒரு நீதி ம
ஆமாம்! அவர்களுக்கு இது ஒரு சந்
வரும் மேடையில் தோன்றி தன்னை
கொண்டார்.

காலஞ் சென்ற ஈழத்துக் கவிஞர் ப
களை மேடையில் சந்தத்துடன பாடி
கள் "முத்திரை"யைப் பதித்துச் சென்
மாகி நடத்துகொண்டிருந்தபோது
போடத்தொடங்கினர். எனினும் மன
பணியை திறம்படத் தொடர்ந்தன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையபாரதியின் வெற்றி விழாக்கள்!
# ...ற்சிக்கு கிடைத்த மாபெரும் வரவேற்பு

...தால் கொஞ்சம் பிந்தியே விழா ஆரம்ப
...வெளியே சென்றுவிட்டு 5.55க்கு மீண்
...ங்கின்றோம். வெளியில் அவ்வளவு கூட்
...ஸாகா விழா எழுப்பிக் கொடுததது:

...ர் பார்வை
...லோகா + ஜெகா

...து விடுமோ" என்று எங்களுக்குள்
...வுத்தவாறு, இனிச் சனம் வந்து விழாத்
... எனறு நினைத்துக்கொண்டு வாசலி

... மண்டபத்தினுள்ளே ஒலிவாங்கியில்,
... அறிவிப்பும், அதனைத் தொடர்ந்த
...பத்தை அதிர வைத்தன. திடுக்கிட்டு,
...ித்துக்கொண்டு, மண்டபத்தினுள்
...ாத நிலையில் ஆளுக்கொருவராக அகப்
... கொண்டோம்.

...ப்துல் ஹமீத் ஒலிவாங்கியை கையில்
...போல ரசிகர்களின் கரகோஷம் முழுக்
...தையும் ஒரு நிமிடம் ஆட்டம் போட
...து. தனக்கேயுரிய புன்னகை தவழும்
...துடன, செந்தமிழை ஒவ்வொன்றுய்
...ட்டு, அதனையே பின்னர் மாலை
........ அப்பப்பா.. எப்படித்தான் நிகழ்ச்சி
...திமுகம் செய்தார் அப்துல்ஹமீட். ஒரு
... நடனத்திலிருந்து நாடகம் வரையி
...ிகழ்சிகளின் தரம், மறுபுறத்தில் அவற்
...டு கொடுக்கும் வகையிலான தொகுப்
...ஆலாபன அறிவிப்பும். மலரும் மண
...போல ,நகமும் சதையும் போல
...ிம் இரண்டறக் கலந்து இரண்டு
...ழாவும் எழுப்பம் கண்டன.

...ல் இடம் பெற்ற நடன நிகழ்ச்சிகளில்
...ாக எல்லாவற்றிக்கும் பின்னணியில்
...பான பாடல்களுக்கே கலைஞர்கள் நட
...றலும் பாரதியாரின் பாடல் ஒன்றுக்கு
...ாடிய கலைஞரும் நடன ஆசிரியருமான
...னது நடனம் சபையோரை மிகவும்
...து. காரணம் இவர் ஒரு ஆண் கலைஞர்.
... ஆடம்பரமான உடையமைப்பும் இல்
... எளிமையாகவும், அடக்கமாகவும்
...ு பங்கைச் செலுத்தினர். நடனமென்
...தியிலான அனைத்து அங்க அசைவுகளை
...மித்துக் கொள்ளக் கூடியது என்பதை
... நடன்ம் நமக்கு உணர்த்தியது.

...மது தாயக மண்ணிலிருந்து புலம்
...புள்ள சட்டத் தரணிகளுக்கு "களம்"
...ண்டும் என்பதற்காக ஏற்பாடு செய்யப்
...நீதி மன்றத்தில் நிற்பது போலவும்..
... ஒரு சந்தர்ப்பம். பொறியியலாளர் ஒரு
... தன்னையும் அவர்களில் ஒருவராக்கிக்

...விஞர் மகாகவியின் இரண்டு கவிதை
...ன பாடி நடித்த மூன்று கலைஞர்கள் தங்
...ச் சென்றார்கள். இந்த நிகழ்ச்சி ஆரம்ப
...போது சபையிலிருந்த சிலர் கூச்சல்
...ும் மனம் தளராத கலைஞர்கள் தங்கள்
...ர்ந்தனர். இங்குதான் அப்துல் ஹமீத்

தின் பல்துறைப் புலமை வெளிப்பட்டது. ஈழத்து கவிதா உலகைப் பற்றி சிறிது விளக்கத்தோடு ஒரு "சூடு" போட்டு, அவர்களின் வாயை மூடச் செய்து கவிதா நிகழ்வு இனிதே நிறைவேற வழி செய்தார். தென்னக சினிமாவின் பாதிப்பு எமது தமிழ்க் கலைஞர்களின் ஆற்றலை அவமரியாதை செய்யுமளவுக்கு எமது ரசிகர்களை மாற்றி விட்டதா? என்னதான் 'தடை'களை ஏற்படுத்த முனைந்த போதினும் கவிதா நிகழ்வு திறம்பட நடந்து முடிந்தது.



சங்கமத்தின் "வெலஸ்லி பொன்னையா" புகழ் செல்வகுமாரின் "சக்கடத்தார்" அனைவரையும் வயிறு குலுங்கச் செய்து விட்டார். 60ம், 70ம் ஆண்டுகளில் அச்சுவேலி ராஜரட்ணம் (ராஜ் குழுவினர்) வழங்கிய சக்கடத்தரைப் பார்த்தவர்களுக்கு , எந்த வித்தியாசமும் தெரியவில்லை. உயரம், உருவம், பேச்சு, சக்கடத்தாரையே (ராஜ்) தரிசித்தோம்.சபாஷ் செல்வகுமார்! சபாஷ்!

"கந்தர் கதிர்காமத்தம்பி உலகநாதர்".. இவரை மறக்க முடியுமா? பன்னிரண்டு மாதங்களாக சங்கமத்தின் வானலைகளில வந்து, நேயர்களுடன் ஒட்டி உறவாடிய உலகண்ணையை நேரில் கண்டோம்! களித்தோம்! இவர் ஒரு நடிகரா? யார் சொன்னது! இவரது ஒவ்வொரு அங்க அசைவுகளும் கதை சொல்லும். என்றுமே கலகலப்பான தீசன் (உலகண்ணை) மேடையில் வந்தார்! ரசிகர்கள் உள்ளங்களை வென்றார்! வெற்றியுடன் சென்றார்! இதற்கு மேல் சொல்ல என்ன இருக்கிறது? வெல்டன் தீசன்! வெல்டன்.




சங்கமத்தின் வாராந்த நிகழ்ச்சிகளில் அவ்வப்போது "சொட்டுச் சொட்டாக" கேட்ட, ரசித்த, உணர்ந்த சிறு நாடகங்களின் ஒட்டு மொத்த அமைப்பு - "வீடு, மனைவி, மக்கள்" நாடகம். வானொலி நாடகத்தை, அதி சிறந்த ஒத்திகை மூலம் மேடையேற்றி விழாவின் சிகரமாக அரங்கேற்றினார் இளையபாரதி. இந்த நாடகத்தில் யாரைப் பெயர் சொல்லிப் பாராட்டுவது? யாரைச் சொல்லாமல் விடுவது? கதை, வசனம், நெறியாள்கை, மேடையமைப்பு, தயாரிப்பு எல்லாமே சங்கமத்தின் நாயகன் இளையபாரதிதான். சும்மா சொல்லக் கூடாது - கனடியன் ரமிலரின் நிகழ் கால பிரச்சனைகளை மிக மிக நுண்ணியதான வசனங்கள் மூலம் 'ஒப்பிரேஷன்' செய்திருக்கிறார். "சரி... சரி..." இளையபாரதியின் "ட்ரேட் மார்க்" ஆகிவிட்டது. பலே! பலே! இளையபாரதி பலே!

முதல்நாள் விழாவில் சங்கமம் தயாரிப்பாளர் இளையபாரதிக்கு ஸ்ரீகௌரி மங்கள சேவையின் சார்பில் சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் விருது வழங்கிக் கௌரவித்தது குறிப்பிடவேண்டியது.

இரண்டாம் நாள் விழாவில் சங்கமம் கலைஞர்களுக்கு பிரதம விருந்தினர் ஈழத்துப்பூராடனார் மூலம் விருதுகள் வழங்கிக் கௌரவித்தது குறிப்பிடவேண்டியது.

ஏஷியன் (F) பைன் ஆர்ட்ஸ்" அமைப்பின் கன்னி விழா இது!

சங்கமத்திற்கு இது வெற்றி விழா!
ஒன்ராறியோ மாகாண அரசிடமிருந்து வெகு ஜன தொடர்புச் சேவைக்காக ஏற்கனவே விருது பெற்ற இளையபாரதிக்கு நேயர்கள் வழங்கிய "வெகுமதி" இந்த விழாக்களின் அமோக வெற்றி.



"பாம்பின் கால் பாம்பறியும்" என்பார்கள். இளையபாரதியின் தகுதியும், தராதரமும் கண்டு, நட்புக்கு ஒரு இலக்கணமாக ஈழத்திலிருந்து கனடிய மண்ணைக்கு வந்து, சங்கமம் விழாக்களை சிறப்பித்து வைத்த அப்துல் ஹமீட் என்றும் நன்றிக்குரியவர், பாராட்டுக்குரியவர்.
சங்கமம் விழாக்கள் நிறைவான விழாக்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் பதவியை இழந்து மீண்டும் அமைச்சரான திரு. வால்கூட் அவர்களும் 'C-86' மசோதாவும்

## MINISTER VALCOURT AND BILL 'C-86'

**புதிய குடிவரவுச் சட்டத்திருத்தமான Bill C-86 பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து குடிவரவு, வேலை வாய்ப்பு அமைச்சர் திரு.பேர்னாட் வால்கூட்டின் 'புகழ்' நாடு முழுவதும் பரவியுள்ளது. அமைச்சரின் வாழ்க்கை வரலாற்றையே பத்திரிகைகள் அலசி ஆராயத் தொடங்கியுள்ளன. "Refugee Update" பருவவெளியீடு விபரக் குறிப்புக் கட்டுரையொன்றை சுருக்கமாகவும், சுவையாகவும் கடைசி இதழில் எழுதியிருந்தது. அதனை திரு.எஸ். சிற்றம்பலம் அவர்கள் மொழிபெயர்த்துள்ளார். கீழே பிரசுரமாகியுள்ளது மொழிபெயர்ப்பாகும்.**

நியூபிரன்ஸ்வீக்கில் ஓர் அநாமதேய பிற்போக்கு வழக்கறிஞராக இருந்த பேர்னாட் வால்கூட், தனது அரசியல் வாழ்க்கையை *1984*ம் ஆண்டு ஆரம்பித்தார். அவர் 'ரோறி'களுக்குள் (கன்ஸர்வேடிவ் கட்சிக்குள்) தனது செல்வாக்கைப் பெற முயற்சி செய்தார். பிரதமமந்திரியும் இதற்கு ஆதரவாக இருந்தார். இரண்டு வருடங்களுக்குள் திரு.மல்ரூனி அவர்கள் இவரை சுற்றுலா சிறுதொழில் அமைச்சராக உயர்த்தினார். பின்பு மிக விரைவாக இந்தியர்களினதும் வடபகுதி விவகாரங்களினதும் அமைச்சராகவும் அதன் பின் கூட்டுத்தாபன அமைச்சராகவும் பதவியுயர்ந்தார்.

மதுபோதையில் கார் ஓட்டியதற்காக குற்றம் சாட்டப்பட்டதன் பேரில் தனது அமைச்சர் பதவியை அவர் இழந்தார். இத்துடன் அவர் அரசியல் வாழ்க்கை அஸ்தமித்து விட்டதாக பலர் கருதினர். ஆனால் அவருக்கு ஓர் 'இரண்டாவது சந்தர்ப்பம்' அளிக்கப்பட்டது. ஆறு மாதங்களுக்குள் அவர் மீண்டும் அமைச்சரானதோடு ஏப்ரல் *21, 1991*ம் ஆண்டு நிகழ்ந்த ஒரு பெரிய அமைச்சரவை மாற்றத்தின் போது குடிவரவு வேலைவாய்ப்பு அமைச்சராக்கப்பட்டார்.

பதவியேற்ற முதல் எட்டு மாதங்களாக அவரின் பொறுப்பிலுள்ள குடிவரவு சம்பந்தமான விடயங்களில் திரு.வால்கூட் மௌனம் சாதித்தார். அவர் அகதிகளுக்கு ஆதரவளிக்கும் குழுக்களுக்கு பேட்டி கொடுக்க மறுத்ததோடு, அகதிகள் குடிவரவு ஆகிய விடயங்களில் வெளிப்படையாக எவ்வித அபிப்பிராயமும் தெரிவிக்க மறுத்தார்.

செப்டம்பர் *21, 1991* இல் அமைச்சரவர்கள் அகதிக்கோரிக்கை தேக்கநிலை கையாளும் முறை பற்றி நாடாளுமன்றத்தில் ஒரு சுருக்கமான விளக்கம் கொடுத்தார். தேக்கநிலையைக் கையாளும் முறை நியாயமானது என்றும், அகதிகள் கனடாவின் அகதிக் கொள்கையை துஷ்பிரயோகம் செய்பவர்கள் எனவும் கூறியதுடன், கேள்விகளுக்கு விடையளிக்காமல் தவிர்த்துக் கொண்டார். அகதிகளை வெளியேற்றுவதும் அதை நடைமுறைப் படுத்துவதும் இவ்வமைச்சருக்கு தனிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்தவை என்பது இறுதியில் தெளிவாகியது. 'குளோப் அன் மெயில்' பத்திரிகைக்கு கொடுத்த ஒரு பேட்டியில் (ஒக்ரோபார் *17, 1991*) திரு.வால்கூட் அவர்கள் அகதிகள் பற்றிய தனது மனப்போக்கை பின்வருமாறு வெளிப்படுத்தினார்.

"அகதிகளை அவர்கள் சொந்த ஊருக்கோ அல்லது எவ்வூரினூடாக வருகிறார்களோ அந்த ஊருக்கோ, அதாவது அமெரிக்காவுக்கோ திருப்பி அனுப்பக் கூடியதாக இருக்கையில், கனடாவில் உள்ள நாம் ஏன் இந்த சிரமத்திற்குள் மாட்டிக் கொள்ள வேண்டும்". நவம்பர் *25 1991*ல் குடிவரவு தொடர்பான பாராளுமன்ற உபகுழுவுக்கு கொடுத்த அறிக்கையிலும் இதே கொள்கையை அவர் பின்வருமாறு வலியுறுத்தியுள்ளார். "நாம் இது விடயமாக மிக ஊக்கத்துடனே இயங்கி, இந்த நாட்டில் இருப்பதற்கு எவ்வித உரிமையற்றவர்களை அகற்றவும் நாடுகடத்தவும் செய்யும் நோக்கமுடையோம்."

*1991-95*க்கான அரசாங்கத்தின் குடிவரவுக் கொள்கை பற்றி பாராளுமன்றத்திற்குச் சமர்பித்த அவரது வருடாந்த அறிக்கையில் திரு.வால்கூட், அகதிகள் மேல் அவருக்குள்ள ஆத்திரத்தை வெளிப்படுத்தினார். "சுயநலத்தோடு உந்தப்பட்ட குடிபெயர்வு" "அடைக்கலம் விலைக்கு வாங்குதல்" என்ற பதங்களை பாவித்து அகதிநிலை கோருவதை வர்ணித்தார். அகதிகளையும், குடிவரவாளரையும் கட்டுப்படுத்தும் விவகாரங்களில் அரசாங்கத்தின் கவனமுள்ளது என்பதை அவரின் திட்டம் வெளிப்படுத்தியது. இத்திட்டமே இப்போது கொண்டு வரப்பட்ட சட்டத்தில் தெளிவாகின்றது.

"அடைக்கலம் தேடுவோர் அடைக்கலம் விலைக்கு வாங்குவதைத் தவிர்க்க செய்யும்" வழிவகைகளை நடைமுறைப்படுத்துவது பற்றியும் அமைச்சர் கவனம் செலுத்தினார். "அடிப்படை உரிமை சட்டத்தின் வாயிலாக கனடாவில் வாழும் ஒவ்வொருவருக்கும் மேன்முறைமீடு செய்வதற்கோ அல்லது நீதிமன்ற மறு பரிசீலனை செய்வதற்கோ உள்ள உரிமையை அகதிநிலை மறுக்கப்பட்டோர் பாவிப்பதனால் அவர்களை நாடுகடத்தல் செய்வதில் மிகவும் தாமதம் இருப்பதாகவும்" அமைச்சர் அறிவித்தார். திரும்பிப் பார்த்தால், இக்கூற்று C-86 மசோதாவிலுள்ள அகதிக் கோரிக்கை மறுக்கப்பட்டோர் சிலர் மேன்முறையீடு செய்வதற்கு அனுமதி பெற விண்ணப்பிக்கையில் அவர்களை விரைவாக வெளியேற்றுவதை ஏதுவாக்கும் ஷரத்தின் முன்னறிவித்தலாகவே தெரிகின்றது.

குடிவரவுப் பொறுப்பை ஏற்று பத்து மாதங்களின் பின் பெப்ரவரி *12, 1992*இல், கனடிய அகதிகள் கவுன்சிலின் பிரதிநிதிகளுக்கும் அமைச்சருக்குமிடையான முதற் கூட்டம் நிகழ்ந்தது. இக்கூட்டத்தில் குடிவரவு, அகதிகள் சம்பந்தமான பிரச்சனைகள் பற்றி அவர் அதிகம் அறிந்திருக்கவில்லை என்ற அபிப்பிராயத்தையே திரு.வால்கூட் விட்டுச் சென்றார்.

திரு.வால்கூட், மனித உரிமை, அகதிகள் பாதுகாப்பு ஆகியவற்றை உதாசீனம் செய்வது விஜில் ஸ்தாபனத்தோடு அவருக்குள்ள தொடர்பிலிருந்து புலனாகின்றது. *1991*ம் ஆண்டு முழுக் காலமும் 'விஜில்' ரொறன்ரோ சமர்பித்த *30* அகதி விவகாரங்களில் *3* மாத்திரமே ஏற்கப்பட்டது. மே *25, 1992*இல் விஜில் ரொறன்ரோ அமைச்சருக்கு எழுதிய ஓர் கடிதத்தில் கூறியதாவது: "நீங்களும் உங்கள் அலுவலகமும் அகதிநிலை நிர்ணயிக்கும் முறையில் உள்ள பிழைகளையும் குறைபாடுகளையும் நிவர்த்திப்பதற்கான வழிவகைகளைச் செய்வதற்கு விருப்பமோ அல்லது இயல்போ காட்டுவதாக இல்லை. உங்கள் அலுவலகத்தில் நாம் நம்பிக்கையிழந்து விட்டோம். நீங்கள் அகதிநிலைகளுக்கு பொறுப்பேற்பதிலும் பார்க்க அவர்கள் உயிரிழப்பதற்கும், துன்புறுத்தலுக்குமாக நாடு கடத்துவதையே விரும்புகிறீர்கள் என நாம் காண முடிகின்றது".

அமைச்சர் அகதிகளை கட்டுப்படுத்தும் தமது கொள்கையை கடுமையாக தொடர்ந்து நடைமுறைப்படுத்தினார். *1991*இல் அகதிகளை அகற்றும் விகிதம் *1990*இலும் பார்க்க *235* வீதத்தினால் அதிகரித்தது. அத்துடன் *1992*இன் முதல் மூன்று மாதங்களில் அகதிகளை ஏற்பது *1991*இல் இருந்த *64* வீதத்திலிருந்து *54* வீதமாக குறைந்தது. *1992*ஏப்ரல் இரண்டாம் திகதி பத்திரிகைகளுக்கு வெளியிட்ட செய்தியில் திரு.வால்கூட் கூறியதாவது: "நாம் தொடர்ந்து புதிய முறைகளையும் திருந்திய நுண்ணறிவுகளையும் பிரயோகித்து அகதிகளை அகற்றும் வழிகளைத் திருத்தியமைப்போம்". இதன் ஒரு விளைவுதான் நிராகரிக்கப்பட்ட அகதிகளை தடுப்புக் காவலில் வைப்பதைக் கூடுதலாக பாவிப்பதாகும்.

ஜுன் *16*இல் அரச சார்பற்ற அமைப்புகளுடன் எதுவித ஆலோசனையும் செய்யாது, அமைச்சர் கனடாவின் குடிவரவு சட்டத்தில் பாரதூரமான மாற்றத்தைக் கொண்டுவரும் C-86 மசோதாவை சமர்பித்தார்.

இம்மசோதா தேவையானது ஏனென்று அவர் பின்வருமாறு கூறினார்: "அவர்கள் (கனடியர்கள்) இந் நாட்டை முன்னேற்றுவதற்கு வரவிரும்பிய நூறுயிரக் கணக்கான நல்ல மக்களை கியூவரிசை தாண்டி பொய்யான அகதிகள் வருவதை விரும்பவில்லை" (The Toronto Sun, July 17, 1992).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஒரு கவனமான மருந்துச்சீட்டு

## ஒன்ராறியோவின் மருந்துப் பொருட்கள் வசதித்திட்டத்தில் மாற்றங்கள்

சுகாதார அமைச்சு ஆகஸ்ட் 25ம் திகதி முதல் ஒன்ராறியோ மருந்துப் பொருட்கள் வசதித் திட்டத்தில் (Ontario Drug Benefit Program) மாற்றங்கள் செய்கிறது.

இந்த திட்டத்தில் மாற்றங்கள் செய்வதற்கான பரிந்துரைகளைச் செய்யும்படி அமைச்சு சுகாதார நிபுணர்களைக் கொண்ட சுதந்திரமான குழு ஒன்றைக் கேட்டிருந்தது. அதன் விளைவாக, சில மருந்துகள் சேர்க்கப்பட்டுள்ளன, வேறு சில நீக்கப்பட்டுள்ளன.

திட்டத்தில் உள்ளவர்களில், கடுமையான உடல் நலக்குறைவு உள்ளவர்களுக்கு மருத்துவரால் எழுதிக் கொடுக்கப்படும் அவசியமான மருந்துகள் மேலதிக செலவின்றி, தொடர்ந்தும் கிடைக்கும். அத்துடன், நீரிழிவு நோய்க்கான இன்சுலின் போன்ற நேரடியாக வாங்கப்படக் கூடிய மருந்துகளும் இதில் அடங்கும்.

பாக்கின்சன் நோய்க்கான புதிய மருந்து, தோலில் பரு தோன்றும் நோய்க்கான மருந்து என்பனவும் புதிதாக சேர்க்கப்பட்ட மருந்துகளில் அடங்கும். சூரிய ஒளித் தடை, உயிர்ச்சத்துக்கள், antihistamines போன்ற மருந்துகள் நீக்கப்பட்டுள்ளன.

மொத்தத்தில், இத்திட்டத்தில் அடங்கிய மருந்துகளில் சிறு விகிதத்தையே இந்த மாற்றங்கள் பாதிக்கின்றன.

**ஏன் மாற்றங்கள் செய்யப்படுகின்றன?**

அரசாங்கம் உடல்நலத்திற்கான செலவீனங்களை திறமையாக நிர்வகிக்க செயற்படுகிறது. தற்போது ஒன்ராறியோ மருந்துப் பொருள் வசதித் திட்டத்திற்கு அரசு வருடாந்தம் ஒரு பில்லியன் டொலர்களைச் செலவிடுகிறது.

கடந்த பத்து வருடங்களில் வருடாந்தம் 18 வீதமாக செலவீனம் அதிகரித்துள்ளது. இந்த மாற்றங்களினால், இந்த அதிகரிப்பை 14 வீதமாக மட்டுப்படுத்த முடியும் என்று நாம் நம்புகிறோம்.

**மேலதிக விபரங்கள் வேண்டுமா?**

ஒன்ராறியோ மருந்துப் பொருள் வசதித் திட்டம் 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் சமூக உதவி பெறுபவர்களுக்கும் வசதிகளை வழங்குகிறது.

இந்த மாற்றங்கள் உங்களை எப்படிப் பாதிக்கும் என்பதை அறிந்து கொள்ள, அமைச்சின் தகவல் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**1-800-268-1154**

ரொறன்ரோவில்: 314-5518

செவிப்புலன் குறைந்தோருக்கு: 1-800-387-5559

**Ontario**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஸ்ரீ விஜயலக்ஷ்மி வாசா

## திருமணம் மற்றும் இந்துமத கிரிகைகள் சேவைக்கும்

- திருமணம்
- முத்து மணவறை
- சடைநாகம்
- தலைப்பாகை
- நாதஸ்வரம், தவில்
- முத்துப்பல்லக்கு
- பூமாலைகள்



- திருமணப் பதிவு
- பூமாலை
- தலைநகை
- மண்டப அலங்காரம்
- பூந்தண்டிகை
- அபிஷேகத் திரவியங்களுக்கும்

தொடர்பு கொள்ள வேண்டியவர்

"சிவாகம பூஷணம்"

**சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்கள்**

(திருமணப் பதிவு அதிகாரி)

243 MARGUERETTA ST., TORONTO, ONT. M6H 3S4

T.PHONE: **534-0011**

# ஸ்ரீ விஜயலக்ஷ்மி வாசா

*பிராமணாள் சைவ உணவுச் சேவை*

உங்கள் இல்லங்களின் மங்கள வைபவங்களுக்கு மட்டுமன்றி முக்கியமான விரதநாட்கள், மத அனுஷ்டான தினங்கள், தமிழர்களின் பாரம்பரிய கொண்டாட்டங்களுக்குத் தேவையான அறுசுவையுடன் சேர்ந்த சைவ உணவுக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

சோறு, கறிகளுடன், சொதி, தயிர், மோர்மிளகாய், அப்பளம், பாயாசம், வடை ஆகியவற்றையும் சேர்த்து ஒரு சாப்பாட்டின் விலை ஐந்து டாலர்கள் மட்டுமே, நீங்கள் தெரிவிக்கும் இடத்திற்கு எங்கள் வாகனத்தில் கொண்டு வந்து விநியோகிக்கப்படும்.

திருமணப் பலகாரங்கள், சிற்றுண்டிகளுக்கும் ஆடர்கள் ஏற்கப்படும்

உடனுக்குடன் விநியோகம்: வருடம் முழுவதும் தினசரி 24 மணி நேர சேவை

தொடர்புகட்கு: T.PHONE: **534-0011**

243 MARGUERETTA ST., TORONTO, ONT. M6H 3S4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென். ஜோன்ஸ் - சென்றல் கிரிக்கெட் போட்டியில் வெற்றிக்கிண்ணத்தை சென்றல் சுவீகரித்தது

## 50 OVER CRICKET - CENTRAL WON

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ், சென்றல் கல்லூரிகளின் பழைய மாணவர்களது நான்காவது ஆண்டு 50 ஓவர்கள் கிரிக்கெட் போட்டி, கடந்த (ஆகஸ்ட்) மாதம் முதலாம் திகதி ரொறன்ரோ Sunny Brook Park மைதானத்தில் நடைபெற்றது.



பிரதம விருந்தினர் திரு.ஜே.ரி. செல்லையா உரையாற்றுகிறார். அருகில் திரு. ரி. தவராசலிங்கம்

இந்தப் போட்டிகளில் சென்றல் கல்லூரி அணி, சென். ஜோன்ஸ் அணியை முப்பது ஓட்டங்களால் வெற்றி பெற்று, இந்த வருடமும் வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றல் கல்லூரி சகல விக்கட்டுகளையும் இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றது. எம். எஸ். ரமீஷ் - 47; எம். முருகானந்தராஜா - 27; ரி. ஜெயகுமார் - 17; சுதர்ஸனன் - 10; ரி. சஞ்சயன் 14 ஆட்டங்களுக்கு 4 விக்கட்டுகள்; பி. ரங்கராஜன் 28 ஆட்டங்களுக்கு 3 விக்கட்டுகள்; எஸ். சுரேஷ்குமார் 32 ஆட்டங்களுக்கு 2 விக்கட்டுகள்.



சென்றல் கல்லூரி அணியினர் மகிழ்ச்சிப் பெருக்கில் கல்லூரிக் கீதம் இசைக்கும் பொழுது எடுக்கப்பட்ட படம்.

அடுத்து துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி சகல விக்கட்டுகளையும் இழந்து 89 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. பி. ரவிராஜன் - 29; எஸ். சுதாகர் - 10; ஜெயா கனகநாயகம் 21 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுகள்; சுதர்ஸன் 9 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகள்; கே. சாந்திகுமார் 22 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகள்; எம்.முருகானந்தராஜா 6 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகள்.

சென். ஜோன்ஸ் கல்லூரியின் ஓய்வு பெற்ற பதில் அதிபர் திரு. ஜே. ரி. செல்லையா பிரதம விருந்தினராகப் பங்கு பற்றினார். சென். ஜோன்ஸ் பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு. ரி. தவராசலிங்கம் ஆரம்ப உரை நிகழ்த்தினார். திருமதி. செல்லையா வெற்றி வீரர்களுக்கு பரிசில்களை வழங்கினார்.

போட்டியின் சிறப்பு வீரர்: எம். முருகானந்தராஜா (சென்றல் கல்லூரி) - சென்றல் பழைய மாணவர் வழங்கிய வெற்றிக் கிண்ணம்

சிறந்த ஆல் ரவுண்டர்: பி. ரவிராஜன் (சென்.ஜோன்ஸ்). கிரிக்கெட் வீரனாகத் திகழ்ந்த எஸ். தி. அகிலன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணம் அகிலனின் பெற்றோரினால் வழங்கப்பட்டது.

சிறந்த துடுப்படிகாரர்: எம். எஸ். ரமீஸ் (சென்றல் கல்லூரி)

சிறந்த பந்து வீச்சாளர்: ரி. சஞ்சயன் (சென். ஜோன்ஸ்)

சிறந்த மைதான வீரர்: கே.ஜெயகுமார் (சென்றல்)



போட்டியில் வெற்றி பெற்ற வீரர் ஒருவர் பிரதம அதிதியின் பாரியார் திருமதி. செல்லையா அவர்களிடமிருந்து தமது வெற்றிக் கிண்ணத்தைப் பெறுவதை இங்கு காணலாம். (படங்கள் எஸ்.ரி. சிங்கம்)



அகிலன் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்ட அகிலனின் பாடசாலை நண்பன் "ஆல்ரவுண்டர்" ரவிராஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வசந்தா நகைமாளிகை

விரும்பும் டிசைனில் குறித்த தவணையில் நகைகளைத் தருபவர்கள்

1230 Bloor Street West, Toronto

**Tel: (416) 536-3956**

*தமிழர்கள் மனதில் வைத்திருக்க வேண்டிய பெயர்*
*தமிழர்கள் நினைவில் நிலைத்திருக்க வேண்டிய பெயர்*

# சிவாஸ் ரேடிங் கோ லிமிட்டட்

உங்கள் தேவை என்ன?
மரக்கறிகளா? கடல் உணவுகளா? மீன் வகைகளா?
இலங்கை, இந்திய உணவுப் பண்டங்களா?
தோசை, இடியப்பம், அப்பம் சுடச்சுட சாப்பிட விருப்பமா?
உங்கள் தேவை எதுவானால் என்ன? உடன் எங்களை நாடுங்கள்!
**நீங்கள் கேளுங்கள்! நாங்கள் தருகின்றோம்!**

திருமணங்களுக்குத் தேவையான கூறை, பட்டுவேட்டி, சால்வை, தலைப்பாகை, குத்துவிளக்கு, பூமாலைகள், மணவறை, மண்டபவசதி, விசேஷ உணவு வகைகள் உட்பட அனைத்துத் தேவைகளையும் ஒரே இடத்தில் பெற நீங்கள் உனடடியாகத் தொடர்பு கொள்ள வேண்டிய இடம்.

# SIVA'S TRADING CO. LTD

3852 Finch Ave. East, (Kennedy/Finch) Scarborough,

**Tel: 321-2739**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LOW COST CARPETS & RUGS




STOVE / EASY CLEAN

*CARPETS*
- RESIDENTIAL COMMERCIAL
- FREE INSTALLATION

*APPLIANCES*
- FRIDGE, STOVE, WASHER- DRYER

*HOOVER VACUUM*
- PORTABLE & CENTRAL VACUUMS

*COMMUNICATION*
- CELLULAR PHONES




REFRIGERATOR
(FROST FREE)




WASHER

உங்கள்
இல்லத்துக்கான பல்வகை
தரை விரிப்புகளையும்
(Carpets) பல்வேறு
நிறங்களில் பெற்றுக்
கொள்ளலாம்.
மேலதிக கட்டணமின்றி அவை
பொருத்திக் கொடுக்கப்படும்.

உற்பத்தியாளர்களிடமிருந்து
நேரடியாக கொள்வனவு
செய்யப்பட்ட
மின் உபகரணங்களும்
விற்பனைக்குண்டு




DRYER

## CENTRAL VACUUM FROM $289.00

PHONE:
BUSINESS
(416) 605-1990


உரிமையாளரும்
இயக்குனரும்:
**சபேசன்**

BETTER BUSINESS BUREAU

PHONE:
RESIDENCE
(416) 840-1500




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**PAKISTAN**

Imran Khan (captain)
Javed Miandad
Waquar Younis
Wasim Akram
Moin Khan
Mushtaq Ahmad
Aqib Javed
Shoaib Mohammed
Inzaman-Ui-Haq
Amir Sohail
Ata-ur-Rehaman

**REST OF THE WORLD XI**

Kapil Dev (India, captain)
Mohammed Azharuddin (India)
Ajay Jadeja (India)
Navjot Sindhu (India)
Sachin Tendulkar (India)
Arvinda de Silva (Sri Lanka)
Brian Lara (West Indies)
James Adams (W. Indies)
Patrick Patterson (W. Indies)
Carl Hooper (W. Indies)
Rajindra Dhanraj (W. Indies)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கெட்டிக்கார மாணவி சசிகரி



மொன்றியல் Ecole Barhelemy Vimont ஆரம்பப் பாடசாலையில் 1989 - 90 ஆண்டில் ஆறும் வகுப்பில் பயின்ற செல்வி. சசிகரி ராஜசந்திரா அந்த ஆண்டின் மிகச் சிறந்த புள்ளிகளைப் பெற்று, முதல் மாணவியாகத் தெரிவுசெய்யப்பட்டு, அதற்கான பதக்கத்தையும் பெற்றுள்ளார். தொடர்ந்து Polyvalanate Lucian Page Secondary பாடசாலைகளில் முதலாம், இரண்டாம் வகுப்புகளில் (1990 - 91, 1991 - 92) சிறந்த மாணவிக்கான சிறப்பு விருதுகளைப் பெற்று வெற்றிக் கேடயங்களை சுவீகரித்துள்ளார். தமிழ், ஆங்கில ஆகிய மொழிகளுடன் பிரெஞ்சு மொழிகளிலும் நல்ல தேர்ச்சி பெற்றுள்ள செல்வி. சசிகரி, இலங்கையில் உடுப்பிட்டியைச் சேர்ந்த ராஜசந்திரா தம்பதிகளின் புதல்வியாவார். தனது ஒன்பதாவது வயதில் பிரஞ்சு மொழியைக் கற்க ஆரம்பித்த இவர் தனது பன்னிரண்டாவது வயதில் அதற்கான பதக்கத்தைப் பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

தகவல்: எஸ். ஏ. சிவபாதம்.

## ஸ்காபுரோவில் சாயி பஜனை

ஸ்காபுரோவில் சாயி சமித்தியினரால் இரண்டு வாரத்துக்கு ஒரு தடவை ஸ்காபுரோ ஹூபன் கல்லூரி மண்டபத்தில் பஜனை நடத்தப்படுகின்றது. பிற்பகல் வேளையில் 6 மணி முதல் 7 மணி வரை இந்த பஜனை நடைபெறுகின்றது. செப்டம்பர் மாதத்தில் 13ம், 27ம், திகதிகளில் இந்த பஜனை நடைபெறும்.

## லான்ட்ஸ்ரவுனில் சத்யசாயி பாபா பிரார்த்தனை

லான்ட்ஸ் ரவுண் கூட்டுறவு மனை 3ம் மாடி மண்டபத்தில் கடந்த நான்கு வருடங்களாக சாயிபாபா கூட்டுப் பஜனை வாரந்தோறும் வியாழக்கிழமைகளில் நடைபெற்று வருகிறது.

மேற்படி பிரார்த்தனைக் கழகம் இவ்வாண்டிலிருந்து தமது செயல்களை விரிவாக்கம் செய்து பகவானின் பக்தர்களுக்கு மேலும் ஆத்ம ஞானத்தையும், அருளுரைகளையும் விளக்க முன் வந்துள்ளது.

சென்ற ஜூலை மாதம் 2ந் திகதி சாயி பக்தர்களுக்கான கல்வி வட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஜூலை 16ந் திகதியன்று "பாலவிகாஸ்" எனப்படும் இளம்சிறுர்களுக்கான மனித மேம்பாட்டுக் கல்வியும், பஜனைப் பயிற்சியும் தொடங்கப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை 16ந் திகதி ஆடிப்பிறப்பு தினம் தமிழருக்கு முக்கியமான தேசிய பண்டிகை நாள் ஆகும். ஆடிப்பிறப்பன்று பகவானின் அருளினால் "பாலவிகாஸ்" ஆரம்பிக்கப்பட்டதோடு சத்ய சாயிபாபாவின் பக்தனும். தொண்டனும் அவரது தமிழ் மொழி பெயர்ப்பாளராக விளங்குபவரும், சனுதனபாரதி (தமிழ்) பத்திரிகையின் ஆசிரியருமான திரு. வெங்கடேஷ் ஸ்ரீனிவாசராகவன் அவர்கள் பகவானின் "கோடைக்கானல் அருளுரைகளிருந்து" சிறப்புச் சொற்பொழிவு ஒன்றை ஆற்றி ஞானவிளக்கம் அளித்தார்.

"பாலவிகாஸ் "வகுப்புகளில் பங்குபற்றும் சிறுவர்கள் 5 - 14 வயதுடையோராவர். பங்குபற்ற விரும்புவர்கள் பெயரையும், வயதையும் கீழ்க் காணும் முகவரியில் அறிவிக்கலாம்.

#604 - 20 வேட் அவனியூ, ரொறன்ரோ M6H 4H3. தொலைபேசி 538 7506. வகுப்புகள் ஆங்கிலத்திலும், தமிழிலும் சேவை அடிப்படையில் நடத்தப்படுகின்றது.

## பார்க்டேல் நிலையத்தில் தமிழ் மொழிபெயர்ப்புடன் இலவச சட்ட உதவி

ரொறன்ரோ 165 டவ்ரின் வீதியிலுள்ள பார்க்டேல் சமூக சட்ட சேவை நிலையம், (Parkdale Community Legal Services) தமிழ் மொழி பெயர்ப்புடனுன இலவச சட்ட உதவிச் சேவைகளை ஆரம்பித்துள்ளது.

ஒவ்வொரு புதன்கிழமையும் பிற்பகல் இரண்டு மணி முதல் ஆறு மணி வரை இந்தச் சேவை இடம்பெறும். பார்க்டேல் பகுதியில் ஒஸிங்ரன், லேக் ஒன்ராறியோ, டார்க் ஸைற் ட்ரைவ், புளோர் தெற்கு ஆகிய இடங்களுக்கு நடுவிலுள்ள பகுதிகளில் வசிப்பதுடன், குறைந்த வருமானத் தில் வாழும் எவரும் இந்தச் சேவைகளைப் பெற உரிமையுடையவர்.

குடிவரவுத் துறை, வேலைக்காப்புறுதிப் பணம், தொழிலாளர் உரிமைகள், வாடகைக் குடியிருப்பாளரின் உரிமைகள், குடும்பப் பிரச்சனைகள் உட்பட பல்வேறு விடயங்கள் பற்றியும் இங்கு உதவி வழங்கப்படும். மேலதிக விபரங்கள் தேவைப்படுபவர்கள் 531 - 2411 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

## தமிழர் தகவலை மாதா மாதம் தபாலில் பெறும் வழி முறை...

தமிழர் தகவலை தபால் மூலம் பெறுவோர் தொகை மாதா மாதம் அதிகரித்து வருகின்றது. சராசரியாக ஒவ்வொரு மாதமும் 25 பேர் வரை தபால் மூலம் தமிழர் தகவலைப் பெறுவதற்கு விண்ணப்பம் செய்து வருகின்றனர்.

1991 பெப்ரவரி மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் முதலாந் திகதி தமிழர் தகவல் வெளியிடப்படுகின்றது. அச்சடிக்கப்படும் 4000 பிரதிகளில் கால்வாசிப் பங்கு, அதாவது ஆயிரம் வரையிலான பிரதிகள் தபால் மூலம் அனுப்பப்படுவது குறிப்பிடத்தக்கது. மிகுதிப் பிரதிகள், குறிப்பிட்ட சில விநியோக நிலையங்கள் ஊடாக விநியோகம் செய்யப்படுகிறது. தமிழர் தகவல் விற்பனை செய்யப்படுவதில்லை.

தபால் மூலம் பெற விருப்பமுள்ளவர்கள், அதற்கான செலவை மட்டுமே பொறுப்பேற்க வேண்டும். ஒரு மாத இதழைத் தபாலில் அனுப்ப ஒரு டாலர் செலவாகின்றது. பத்து டாலர்களை காசுக் கட்டளையாக அல்லது காசோலையாகவோ அனுப்பி வைத்தால் பத்து மாத தமிழர் தகவல் இதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

Tamils' Information என்ற பெயருக்கு ஆங்கிலத்தில் காசோலை அலலது காசுக் கட்டளை எழுதப்பட வேண்டும். அத்துடன் தமிழர் தகவலைப் பெற விரும்புபவரின் பெயர், பூரண தபால் விலாசம், தொலைபேசி இலக்கம் ஆகியனவும் எழுதி அனுப்பப்படவேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

Tamils' Information,
P.O. Box-3
Station "F"
Toronto, Ontario.
M4Y 2L4

மேலதிக விபரங்கள் தேவைப்படிவோர் (416) 920 - 9250 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு, ஒலிப்பதிவு நாடாவில் தங்கள் பெயர், தொலைபேசி இலக்கம் ஆகியவைகளை பதிவு செய்யலாம். பின்னர் அவர்களுடன் தொடர்பு கொள்ளப்படும்.

• விநியோக முகாமையாளர்

உங்கள் குழந்தையின் பரிசுக்குகந்த சிறந்த சேமிப்புத் திட்டங்களுக்கு
BABY BONUS INVESTMENTS
யோகி தம்பிராஜா
F.C.A./F.C.M.A. (U.K)
(416) 291-4400
Extn. 246



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# ஸ்ரீ கௌரி மங்கள சேவை

அனைத்து இந்து மத கிரிகைகளுக்கும் கனடிய திருமணப் பதிவு அதிகாரி, இந்து மதகுரு

**பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்** (ஐயாமணி) (புங்குடுதீவு -10)

**(416) 285-0974**



• திருமணம் • திருமணப் பதிவு • புதுமனை புகுதல், • கடைதிறப்பு வைபவம், • புண்யாக வாசனம்
• பூப்புனித நீராட்டு விழா • பூமாலை • ஆண்டாள் மாலை • சடைநாகம் • தலைநகை செற்
• முத்து மணவறை • தலைப்பாகை • பந்தல் அலங்காரம் • கல்யாண பூஜைப் பொருட்கள்

ஆலய வைபவங்களுக்கான முத்துச் சப்பரம் ஆகியவைகளுக்கு

என்றும் எப்பொழுதும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

**84 Bertrand Ave. Scarborough, Ontario. M1K 2S6**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேக்க நிலையின் இன்றைய நிலை

## BACKLOG - AN UPDATE

குடிவரவுத் திணைக்களத்தின் ஒன்ராறியோ மாகாண சிரேஷ்ட அதிகாரி ஒருவர் அண்மையில் ரொறன்ரோவில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது தேக்க நிலை அகதிகள் (Backlog Refugees) தொடர்பாக அவர்களால் வெளியிடப்பட்ட சில தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

தேக்க நிலை அகதிகள் விவகாரங்களை 250 டேவிஸ்வில் அலுவலகமும், மிஸிஸாகா சிற்றி சென்ரரிலுள்ள தனியான அலுவலகமுமே கவனிக்கின்றன.

மேற்படி அலுவலகங்களில் சுமார் 95,000 பேரினது விண்ணப்பங்கள் தொடர்பான கோவைகள் (Files) ஆரம்பத்தில் இருந்தன.

இவர்களில் சுமார் 50,000 பேருக்கு ஏற்கனவே Landed எனப்படும் நிரந்தர குடியுரிமைப் பத்திரங்கள் வழங்கப்பட்டுவிட்டன.

இன்னும் சுமார் 45,000 பேருக்கு "லாண்டட்" பத்திரங்கள் வழங்கப்பட வேண்டும்.

இவைகளில் சுமார் 12,000பேரைப் பற்றிய தகவல்களைப் பெற முடியவில்லை. இவர்களுக்கு தபாலில் அனுப்பப்படும் கடிதங்களும் திரும்பியிருக்கின்றன. இவர்களை காணாமல் போனவர்களாகவே (Disappeared) கருதவேண்டியுள்ளது. சிலவேளை இவர்களில் சிலர் தாங்களாகவே தங்கள் சொந்த நாடுகளுக்குத் திரும்பிச் சென்றிருக்கலாம்.

இப்போது "லாண்டட்" பத்திரங்கள் கொடுக்கப்படும் வேலை மிகத் துரிதமாக நடைபெறுகின்றது. மாதமொன்றுக்கு 12,000 பேருக்கு வழங்கப்படுகின்றது.

இவ் வருடம் டிசம்பர் 31ம் திகதிக்கு முன்னர் லாண்டட் கொடுக்கக் கூடியதாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சிலரது வைத்திய அறிக்கை, காவல் துறை அறிக்கை வரத் தாமதமாகக்கூடும். 1993 மார்ச் மாதம் 31ம் திகதிக்கு முன்னர் தேக்க நிலை அகதிகளுக்கு "லாண்டட்" பத்திரம் கிடைக்க ஏற்பாடாகியுள்ளது.

தேக்கநிலையில் Designated Class தகுதியில் ஏற்கமுடியாதிருப்பவர்களை பூரண விசாரணைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இவர்களது கோவைகள் குடிவரவு விசாரணைப் பிரிவுகளுக்கு (70 University Ave., and No1, Front St.) அனுப்பப்பட்டு வருகின்றன. காலக்கிரமத்தில் சம்பந்தப்பட்டவர்கள் விசாரணைக்கு அழைக்கப்படுவர்.

# கனடா தமிழ் கலாசார சங்க வாணி விழாவும், போட்டிகளும்

மொன்றியலில் அமைந்துள்ள கனடா தமிழ் கலாசார சங்கத்தின் நான்காவது ஆண்டு வாணி விழா கலை நிகழ்ச்சிகள் அடுத்த மாதம் (அக்டோபர்) 3ம் திகதி சனிக்கிழமை மொன்றியலில் நடைபெறும். நிகழ்ச்சிகளிலும், போட்டிகளிலும் பங்குபற்ற விரும்புபவர்கள் சங்கத் தலைவர் திரு.கே.ரி. சண்முகராஜா அவர்களுடன் (P.O. Box-1691, St-Laurent, Quebec, H4L 4Z2) தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

**பேச்சுப் போட்டி விபரங்கள்:**

கீழ்ப்பிரிவு: 5வயது - 8 வயது. தலைப்பு: "நவராத்திரியின் மகிமை", நேரம்: 3 நிமிடம் (கலந்து கொள்ள விரும்புவர்கட்கு தலைப்புக்கான உரை வழங்கப்படும்.)

மத்திய பிரிவு: 9வயது- முதல் 12 வயது. தலைப்புகள்: (அ) "செல்வத்துட் செல்வம் கல்விச் செல்வம்" (ஆ) "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு", (இ) ஆலய வழிபாட்டில் பெற்றோரின் பங்கு. நேரம்: (5 நிமிடங்கள்)

மேற்பிரிவு: I, 13 வயது-15வயது
தலைப்புகள்: (அ) "இந்து மதமும் வாழ்க்கை முறையும்" (ஆ) "மேலை நாட்டில் சமய வழிபாடு" (இ) "பாரதியும் விஞ்ஞானமும்" நேரம்: (8 நிமிடங்கள்)

மேற்பிரிவு II, 16 வயதுக்கு மேற்பட்டோர்
தலைப்புகள்: (அ) "மேன்மைகொள் சைவ நீதி" (ஆ) "தமிழ் இலக்கியத்தில் சக்தியின் வடிவங்கள்" (இ) "மேலை நாடுகளில் தமிழ்க் கலாசார வளர்ச்சிக்கு நம்மவரின் பங்கு" நேரம்: (10 நிமிடங்கள்).

மத்திய பிரிவு; மேற்பிரிவு - I; மேற்பிரிவு - II ஆகிய பிரிவுகளில் கலந்து கொள்பவர்கள் வழங்கப்பட்ட தலைப்புகளில் விரும்பிய ஒரு தலைப்பினைத் தெரிவு செய்து பேசலாம்.

**போட்டி விதிமுறைகள்:**

1. கனடாவில் எப் பகுதியில் வாழ்பவராயினும் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. வழங்கப்பட்ட தலைப்புகளை மீறி வேறு விடயங்கள் பேசுதல் கூடாது.
3. வேறு போட்டியில் பேசப்பட்ட விடயமாக இருத்தல் கூடாது.
4. வேறு ஒருவரினால் எழுதப்பட்டதாக இருந்தால் அவரிடம் உரிமை பெற்றிருத்தல் வேண்டும். (அத்தாட்சி பார்வையிடப்படும்)
5. பேசும்போது உச்சரிப்பு, பாவம், ஆளுமை, பொருள், ஆழம், நேரம் ஆகியன கவனத்தில் எடுக்கப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.
7. பரிசில்கள் "வாணி விழா" மேடையில் வழங்கப்படும்

**பரிசில்கள்:**

முதற்பரிசு: தங்கப்பதக்கம்
இரண்டாம் பரிசு: வெள்ளிக்கேடயம்
மூன்றும் பரிசு: வெள்ளிக் கிண்ணம்
கீழ்ப்பிரிவில் கலந்து கொள்ளும் சகலருக்கும் ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்

8. போட்டிக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 11 செப்டெம்பர் 1992.
9. மாதிரி விண்ணப்பப் படிவத்தினைத் தயாரித்து பூர்த்தி செய்து தபால்மூலம் அனுப்பி வைக்கலாம்.
10. போட்டியில் ஆண், பெண் இருபாலாரும் பங்கு கொள்ளலாம்.

# ஒன்ராரியோவில் 70 பாடசாலைகளில் ஆண் ஆசிரியர்களே கிடையாது

ஒன்ராறியோ மகாணத்திலுள்ள 70 கனிஷ்ட பொதுப் பாடசாலைகளில் ஒரு ஆண் ஆசிரியர் கூட இல்லை. இதனை நம்பமுடியுமா?

இது முற்றிலும் உண்மை. இந்த அதிர்ச்சியான உண்மையை ஒன்ராறியோ ஆசிரியர் சம்மேளனம் கடந்த மாத நடுப்பகுதியில் வெளியிட்டுள்ளது.

"பெரும்பாலான கல்வி கற்ற ஆண்கள், கற்பித்தலை ஒரு தொழிலாக மேற்கொள்ள விரும்பவில்லை" என்று சுட்டிக் காட்டியுள்ள சம்மேளனம், இந்த நிலை மாறவேண்டும் என்றும், ஆசிரியர் தொழிலுக்கு மேலும் பல ஆண்கள் முன்வரவேண்டும் என்றும் கேட்டுள்ளது.

ஒன்ராறியோவில் மொத்தம் 2524 கனிஷ்ட பொது அரசாங்க பாடசாலைகள் உள்ளன.

உங்கள் பற்களின் நோய்கள் பற்றி
உங்கள் தாய் மொழியில்
கலந்துரையாடி சிகிச்சை பெற

**Dr. அ. சண்முகவடிவேல்**

குடும்ப பல் வைத்தியர்

**Main Square Dental Centre**
2575 Danforth Ave.
(Main & Danforth)

Phone: **690 - 0176**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக சிறு விளம்பரங்கள் COMMUNITY CLASSIFIEDS

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



நீதிபதி வி. பி. சுந்தரலிங்கம்

ஆண்டுகள் ஒன்றென்ன இரண்டென்ன
எத்தனை சென்றிடினும் என்றென்றும்
எம் நினைவில் நிற்கும் உம் நினைவே
எம்மை இயக்குகிறது.
உமது பாசமே உணர்வை ஊட்டி
இதயங்களை துடிப்பிக்கிறது.
சத்தியம், நீதி எனும் உம் இலட்சியப்
பயணத்தில் அடியெடுத்துவைக்கிறோம்.
பயணம் தொடர எம்மை
ஆசீர்வதியுங்கள்
எமது எதிர்காலத்தை திட்டம் தீட்டி
வழிப்படுத்திய அப்பாவே
அதற்கு எம் நன்றிகள் பல!

மனைவி; தவம்
மகன்மார்: சுதர்சன்
சுதாகர்
சுதேஸ்
சுரவின்

338 Spruce wood Court
Scarborough, Ontario. M1W 1R2
Telephone: (416) 756-4663

## மரண அறிவித்தல்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்திப் பிரிவில் கடந்த பன்னிரண்டு வருடங்களாக செய்தி நிருபராக கடமையாற்றிய திரு. எஸ்.ஜீ. என். புஷ்பரத்தினம் மாரடைப்பினால் ஆகஸ்ட் மாதம் 9ம் திகதி காலமானார். திருநெல்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற நேசமாணிக்கம் ஆசிரியர் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரான புஷ்பரட்ணம் பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர். வீரகேசரிப் பத்திரிகையின் யாழ்ப்பாண நிருபரின் உதவியாளராகப் பத்திரிகைத் தொழிலை ஆரம்பித்த இவர், பின்னர் "கொழும்பு ரைம்ஸ்" நிறுவனத்தின் யாழ் மாவட்ட நிருபராக பல வருடங்களாக பணிபுரிந்தார்.

இலங்கை குடும்பத் திட்டச் சங்கத்தில் பணிபுரிந்த நாடகக் கலைஞரான பிராங்க் புஷ்பநாயகத்தின் மூத்த சகோதரர் புஷ்பரட்ணம். இவரது இறுதிச் சடங்குகள் கொழும்பில் நடைபெற்றன.

## MATRIMONIAL

U.S. permanent resident, seeks well educated bride, age between 22-27, from Srilankan Tamil Hindu family. Please send details with horoscope.
M 105, C/o Tamil's Information.

Jaffna Hindu Parents, living in Canada (Toronto) seek attractive educated partner for handsome son, 29 yrs. Canadian Citizen, British qualified Computer specialist, working with government of Canada. Send details with horoscope.
M102, c/o Tamils' Information.

Srilankan Tamil Brother seeks groom for sister 26, final year University student (Toronto), Mars afflicated. Details horoscope. M103 c/o Tamils' Information.

## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் கச்சேரி - நல்லூர் வீதியைச் சேர்ந்த இந்து மதத்தைச் சேர்ந்த தாய், தனது கடைசி மகனுக்கு மணமகள் தேடுகிறார். செவ்வாய் குற்றம் எதுவுமில்லாத சாதகம். வயது 28. கனடிய வர்த்தக நிறுவனமொன்றில் நிரந்தரமாக ஆறு வருடங்கள் பணிபுரிகிறார். சாதகத்துடன் கடித மூலம் தொடர்பு கொள்ளவும்.
M 109, c/o Tamils' Information,

## மணமகன் தேவை

சண்டிலிப்பாயைச் சேர்ந்த இந்து மத பெற்றார் தங்களின் ஒரே மகளுக்கு பொருத்தமான வரன் தேடுகின்றனர். மணமகன் Landed Immigrant ஆகவும், படித்த, தொழில் புரிபவராகவுமிருக்க வேண்டியது கட்டாயம். முதல் கடிதத்திலேயே சாதகத்தை அனுப்பவும். மணமகளுக்கு 24 வயது. ரொறன்ரோ பல்கலைக் கழகத்தில் இரண்டாம் வருடப் படிப்பை முடித்துள்ளார். கனடிய பிரஜாவுரிமை (Citizen) பெற்றவர். மற்றைய விபரங்கள் பேசித் தீர்மானிக்கப்படும்.
M 110, c/o Tamils' Information,

## கவனிக்க வேண்டியது

சமூக சிறு விளம்பரப்பகுதியில் சகல விளம்பரங்களும் கலம் (Column) அளவிலே இடம்பெறும். இப்பகுதிக் கட்டண விபரம் வருமாறு: முதல் இருபத்தைந்து (25) சொற்களுக்கும் பத்து டாலர்கள் (Ten Dollars). மேலதிக ஒவ்வொரு சொல்லுக்கும் ஐம்பது சதங்கள் (Fifty Cents). படம் பிரசுரிப்பதாயின் மேலதிகமாக 20 டாலர்கள் செலுத்த வேண்டும். விளம்பரத்துடன் சேர்த்து பணமும் செலுத்திய பின்னரே அது பிரசுரமாகும். படங்கள் பாஸ் போர்ட் அளவினதாக இருக்கும். மே/பா, தமிழர் தகவல் என முகவரியிட விரும்பும் விளம்பரங்களுக்கு மேலதிகமாக மூன்று டாலர்கள் செலுத்த வேண்டும்.

தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் சிறு விளம்பரம் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி TAMILS' INFORMATION, P.O.BOX -3, STSTION 'F', TORONTO, ONTARIO. M4Y 2L4

## ஒன்பதாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி கலைச்செல்வி கருணரட்ணம்

மயிலிட்டி தெற்கைச் சேர்ந்த பிரான்ஸில் Auber Villiersஐ வசிப்பிடமாகக் கொண்ட கருணரட்ணம் - பாசமலர் தம்பதிகளின் அருமைப் புதல்வி செல்வி கலைச் செல்வி கருணரட்ணம் தனது 9வது பிறந்த நாளை 21.08.1992இல் கொழும்பில் விமரிசையாகக் கொண்டாடினார். அவரை Franceஇல் இருந்து அப்பா, அம்மா, அப்பம்மா, பெரியம்மா, அக்கா, பெரியப்பா, அண்ணா, தம்பி, சித்திமார், அத்தைமார், சித்தப்பாமார், அம்மப்பா, அம்மம்மா அனைவரும் வீரபத்திரப் பெருமான் திருவருளால் சீரும் சிறப்பும் பெற்றுப் பல்லாண்டு வாழ வாழ்த்து கிறார்கள்.

## திருமண அழைப்பு

திருமலை திரு-திருமதி சுப்பிரமணியம் தம்பதிகளின் புதல்வன் பரமேஸ்வரனுக்கும், யாழ்ப்பாணம் திரு-திருமதி. கனகரத்தினம் தம்பதிகளின் ஏக புதல்வி சுகன்யாவுக்கும் செப்டம்பர் 3ம் திகதி பேர்லின் Golden Rajah சென்ரறில் திருமணம் நடைபெறவுள்ளது. உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இந்த அறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

மணமகளின் சகோதரர்:
க.துஷ்யந்தன் (பாலா)
Falken Hausenweg
1000 Berlin - 46
W. Germany



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த பல ஆண்டுகளாக பல இன மக்களின் நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்று
நகை வியாபாரத்தில் முன்னணி வகிக்கும் ஒரே இடம்
உத்தரவாதமுள்ள 22 கரட் தங்கத்தாலான சகலவிதமான ஆபரணங்களுக்கும்
மிக நியாயமான விலையில் மல்லிகை மொட்டு மாலைகள், செயின்கள்,
அட்டியல், தாலிக்கொடி மற்றும் இதர தேவைகளுக்கும்
உங்களின் நகை திருத்த வேலைகளுக்கும் நாடுங்கள்

# நித்தியா ஜுவலர்ஸ்

(ஏழு நாட்களும் திறந்திருக்கும்)

*1620 Gerrard Street East, Toronto, Ont. M4L 2A5*

**(416) 465-5065**

கிளை நிறுவனம்: 3852 Finch Ave. E., Suite #307 (Kennedy & Finch)
Scarborough, Ont. M1T 3T9 Tel: **297-5889**

அழகுக்கு அழகு தருவது
அம்பிகாவின் தங்க நகைகளே!

உங்கள் சேமிப்பை
மாற்றுக் குறையா தங்கமாக்குங்கள்

*மிஸிஸாகவில்*

## அம்பிகா நகை மாளிகை லிமிரெட்

AMBIKA JEWELLERS LTD
(ஏழு நாட்களும் திறந்திருக்கும்)

25 AGNES AVE. UNIT 4A
MISSISSAUGA, ONT.
(DUNDAS & HWY10 சந்தியில்)

TEL: (416) 270-6921

நங்கையர் விரும்பும்
அற்புதமான தங்க நகைகளை
22 கரட் தங்கத்தில் பெற
நீங்கள் நாட வேண்டிய இடம்

*ஸ்காபுரோவில்*

## லலிதா நகை மாளிகை

(செவ்வாய்க்கிழமை மூடப்பட்டிருக்கும்)

LALITHA JEWELLERY LTD

கென்னடி சப்வே சென்றர்
2425 EGLINTON AVE. E., UNIT#6A
SCARBOROUGH, ONT. M1K 5G8

TEL: (416) 757-6568
கார் நிறுத்தும் இடவசதிகளுண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## றொறன்ரோவில் செப்டம்பர் 27ல் சர்வதேச கிரிக்கெட் போட்டி

## International Cricket At Skydome; Sept. 27

றொறன்ரோவில் நடைபெறும் நான்காவது சர்வதேச கிரிக்கெட் போட்டி இம் மாதம் (செப்டம்பர்) 27ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 11.30 மணிமுதல் Skydomeல் நடைபெறும். இவ் வருட உலக சாம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்ட பாகிஸ்தான் கிரிக்கெட் அணியுடன் உலக கிரிக்கெட் குழு போட்டியிடும். உலக குழுவுக்கு இந்திய வீரரான கபில் தேவ் தலைமை தாங்குகிறார். ஸ்ரீலங்கா கிரிக்கெட் வீரர் அரவிந்த் டி சில்வாவும் இக்குழுவில் முக்கிய இடம் பெறுகிறார். இதற்கான தனிநபர் டிக்கட்டுகள் 12.50லிருந்து 35 டாலர்கள் வரையாகும். 50க்கும் மேற்பட்ட டிக்கட்டுகளைப் பெறுபவர்களுக்கு, ஒவ்வொரு டிக்கட்டுக்கும் இரண்டு டாலர் கழிவு உண்டு. மேலதிக விபரங்களை 872 - 5000 என்ற இலக்கத்தில் பெறலாம்.

# ஸ்ரீ லங்கா அகதிகள் 111பேர் இந்த வருடத்தில் நிராகரிப்பு

## 111 SRILANKAN REFUGEES REJECTED

இந்த வருடத்தின் ஜனவரி முதல் ஜூன் வரையான ஆறு மாதங்களிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட, நிராகரிக்கப்பட்ட அகதிகள் மனுக்கள் தொடர்பான புள்ளி விபரங்களை குடிவரவு அகதிகள் சபை வெளியிட்டுள்ளது. முதல் ஆறு மாதங்களிலும் விசாரணை முடிவுற்ற அகதிகளில் 61 வீதமானவர்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்டனர். 1991ம் ஆண்டு முழுவதிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் 64 வீதமாகவிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

முன்னைய காலப்பகுதிகளைப் போன்று இந்த ஆறு மாதங்களிலும் கூட ஸ்ரீ லங்கா அகதிகளே முன்னணியில் நிற்கின்றனர். முதலாம் கட்ட விசாரணையை முடிவு செய்த 3164 ஸ்ரீ லங்கா அகதிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டனர். 9 பேர் நிராகரிக்கப்பட்டனர். முழு விசாரணைக்குட்படுத்தப்பட்ட 2779 ஸ்ரீ லங்கா அகதிகளில் 2650 பேர் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்டனர். மிகுதி 102 பேரும் நிராகரிக்கப்பட்டனர். இரண்டு நிலை விசாரணைகளையும் இணைத்துப் பார்க்கும்போது, இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களிலும் 111 பேர் நிராகரிக்கப்பட்டது தெரியவந்துள்ளது.

"EXPEDITED HEARING PROCESS' என்று சொல்லப்படும் வேகமான விசாரணை நடைமுறையில் ஸ்ரீலங்கா அகதிகளே மிகக் கூடுதலாக 87 வீதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது. அடுத்ததாக ஈராக் (68 வீதம்) சோமாலியா (61வீதம்) ஈரான் (50வீதம்) ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன. இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களிலும் பூரண விசாரணைக்குட்படுத்தப்பட்ட மொத்தம் 15998 மனுக்களில் 9710 மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்டதும் 5,425 மனுக்கள் நிராகரிப்புக்குள்ளானதும் குறிப்பிடத்தக்கது.



ஸ்ரீ சிவா ஜுவலறி

721 Bloor St. W, Toronto, Ontario

(416) 531-4867

 அச்சிட்டது: றிப்ளக்ஸ் அச்சகம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org